Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dialog ඩයලොග් டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 24 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 06 (10.10.2005) திங்கட்கிழமை இதழ்:10

# தொடர்ந்து குலுங்குகிறது பாகிஸ்தான்;

# 35 ஆயிரம் பேர் பலி; 50 ஆயிரம் காயம்!



400 பாடசாலை மாணவிகள் புதைந்துபோன கட்டடச் சிதைவுகளுக்கு மேல் புலம்புகின்ற பெற்றோர்.

இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகவும் - காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கும் அதிகமெனவும் இன்று அதிகாலை வெளியாகிய பாகிஸ்தான் அரசின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்தன.

பூகம்பத்தில் தரைமட்டமாகியுள்ள கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதால், உயிரிழப்பு எண்ணிக்கை 35 ஆயிரத்தைவிட அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதனிடையே நேற்று இரண்டாவது நாளாகவும் பாகிஸ்தானில் 144 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குமாறு வெளிநாடுகளிலுள்ள பாகிஸ்தானியர்களிடம் ஜனாதிபதி முஷாரப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்!

கிளிநொச்சி —

முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் 18 ஆவது ஆண்டு நினைவு நாளும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் இன்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரதான நிகழ்வு கோப்பாயில் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் நடைபெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வாக காலை 9 மணிக்கு கோப்பாய் சந்தியில் ஒன்றுகூடும் மக்கள் - 2ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்தைத் தாங்கியவாறு அவரது நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்திற்கு சென்று அங்கு பொதுச்சுடர், தேசியக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும். அத்துடன் நினைவுத் தூபி முன்பு ஈகச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும், சிறப்புரைகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை - தென்மராட்சி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையிலும் யாழ்.மாணவர் பேரவையிலும் கல்வியியற் கல்லூரியிலும் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் 18 ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் 18 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று மல்லாவியில் இடம்பெறவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு மாவீரர் மண்டபத்திற்கு முன்பாக இருந்து 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்தைத் தாங்கிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## இரகசியங்களை வெளியிட்டால் கடும் ஒழுங்கு நடவடிக்கை!

### கடற்படைத் தளபதி எச்சரிக்கை



கொழும்பு —

கடற்படை தொடர்பான இரகசியங்களை வெளியிடும் அதிகாரிகள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட எச்சரித்துள்ளார்.

கடற்படை இரகசியங்கள் தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளிவருவது தொடர்பாக அண்மையில் பொறுப்பேற்றுள்ள கடற்படைத் தளபதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றின் கடமையை ஏற்று

## பிரதமர் மகிந்தவின் பாதுகாப்பு

# வரலாற்றின் கடமையை ஏற்று விடுதலையின் வழி நடப்போம்!

## அரசியற்துறை மகளிர் பிரிவு அறிக்கை

கிளிநொச்சி —

சமாதானத்தைச் சாகடிக்கும் பேரின வாதமும், பேரினவாத அரசுக்கு துணை போகும் சக்திகளும் அவலத்தைத் தவிர எமக்கு எதையுமே தரப்போவதில்லை. எனவே, வரலாற்றின் கட்டளையை ஏற்று விடுதலையின் வழி நடப்போம் என்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு அரசியற்துறை மகளிர் பிரிவு விடுத்துள்ள அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இன்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள். இந்த நாளில் தமிழீழ மக்கள் அனைவரும் விடுதலை மீதான அதீத பற்றுறுதியோடும், தமிழ்ப்பெண் சமூ கத்துக்கு மாபெரும் முன்னோடியாக வும், தமிழீழப் பெண்கள் எழுச்சியின் குறியீடாகவும் தன்னை அர்ப்பணித்த 2 ஆம் லெப். மாலதியை நினைவு கூருகின்ற புனிதநாள்.

ஆட்காட்டி வெளிக் கிராமத்தின் புழுதி படிந்த வீதிகளில் ஓடித்திரிந்த பெண், உலகத் தமிழினமே போற்றுகின்ற விடுதலையின் குறியீடாக இன்று மாறி யிருக்கின்றாரெனின் அந்த மாற்றத் துக்கு வழியமைத்துக் கொடுத்தது விடு தலைப் புலிகள் இயக்கமேயாகும்.

சத்தியத்துக்காக சாகத் துணிந்து விட்டால் சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரம் படைக்க முடியும் என்பது எமது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கூற்று.

அதனை மெய்யாக்கி தமிழீழப் பெண்கள் அனைவருக்கும் வழிகாட்டி யாகியவர் 2 ஆம் லெப். மாலதி. அவ ரது நினைவோடு எமது இலட்சியத்தை


(12 ஆம் பக்கம் பார்க்க)

வருவது தொடர்பாக அண்மையில் பொறுப்பேற்றுள்ள கடற்படைத் தளபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பிரதமர் மகிந்தவின் பாதுகாப்பு ராணுவ கொமாண்டோக்களிடம்!



கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி சார்பாக போட்டியிடவுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பை இரு வாரங்களுக்கு முன்பிருந்து இராணுவ கொமாண்டோக்கள் பொறுப்பேற்றுள்ளன.

அலரிமாளிகையில் நூற்றுக்கணக்கான பிரத மரின் ஆதரவாளர்கள் - பிரதமரைச் சந்தித்தவேளை இராணுவ கொமோண்டோக்கள் அவரை சுற்றி பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தன.

இதேவேளை - முன்னாள் வெளியுறவு அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை அடுத்து பிரதான கட்சிகள் இரண்டின் வேட்பாளர் களது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாமனிதர் சிவராம் கொலையாளி வெளிநாட்டுக்குத் தப்பியோட்டம்!

கொழும்பு —

ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவரெனக் கருதப்படும் புளொட் ஊறுப்பினர் ஒருவரை பொலி ஸார் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தபோது அவர் நாட்டைவிட்டு தப்பிஓடிவிட்டதாகத் தெரிய வருகிறது.

ஊடகவியலாளர் டி.சிவராமை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றவர் புளொட் உறுப்பினர்தான் என்று பொலிஸார் விசாரணையாளர்கள் கருதுகின்றனர்.

இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர் புடையவரென சிறிஸ்கந்தராஜா என்ற புளொட் உறுப்பினர் மட்டுமே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்ட தாகக் கூறப்படும் வாகனம் புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கு சொந்தமானதாகும்.

இந்த வாகனத்தை மீள பொறுப்பேற்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை இந்த வாகனம் கையேற்கப்படவில்லை.

இதேவேளை சந்தேக நபரான சிறிஸ்கந்த ராஜாவின் சட்டத்தரணி இந்த வழக்கை கடு வெல நீதிமன்றத்திலிருந்து அவிசாவளைக்கு மாற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

# பிரதமர் பதவிக்கான உறுதிமொழியை எழுத்து மூலம் கோருகின்றார் அநுரா!



கொழும்பு —

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் - பிரதமர் மற் றும் வெளிவிவகார அமைச்சர் பதவிகள் தனக்கே வழங்கப்படுமென்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்துமாறு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் அநுரா பண்டாரநாயக்க கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொண்டு தற்போது சிங்கப்பூரில் ஓய்வெடுத்துவரும் அநுரா தனது தனிப்பட்ட செயலாளர் மூலமாக மகிந்த ராஜபக்ஷவிடம் இந்த உறுதி மொழிக்கடிதத்தை கேட்டுள் ளார்.

அநுராவின் நண்பர் இந்த விடயத்தை அமைச்சர் மங்கள சமரவீரவி டம் தெரிவித்துள்ளதாகவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழுவே அநுராதான் பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வாடகைக்கு

சுன்னாகத்தில் சகல வசதிகளுடனும் கூடிய சைவ உணவகமொன்று நாளாந்த வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு-இல.65, K.K.S. வீதி, சுன்னாகம். T.P:- 0779047161, 071 2385316.
(C/4719)

**சுன்னாகம் நாகம்ஸ்**

ஜெயம் ரவி,கலாபவன் மணி, வடிவேல் மற்றும் பலர் நடித்த

**மழை**



காட்சிகள்:-11.00,3.00,7.00,10.00 (பழையநேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், ஜோதிகா மற்றும் பலர்நடித்த

**ராஜா**

காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

**சாணக்யா**



காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

**கஜினி**



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (ப.நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த

**திருமலை**

நாளை முதல் -
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் நடித்த
**குண்டக்க மண்டக்க...**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

# சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்

உடுவில்—

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு வலி. தெற்குப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு -

**சிறுவர் தின கட்டுரைப் போட்டி**

**பிரிவு I**

1ஆம் இடம்-ஜெ.பாரதி (மயிலணி சைவ மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் - ப.ஜெயதர்மினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை), 3 ஆம் இடம்- அ.கேமா (முருகமூர்த்தி வித்தியாலயம், உடுவில்).

**பிரிவு II**

1 ஆம் இடம் - ம.சங்கீதா (இணுவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - ர.வினிதா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), 3 ஆம் இடம் - ந.சிவரூபி (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை).

**பிரிவு III**

1 ஆம் இடம்-இ.கிஷாஜினி (இணுவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - சி.கம்ஷா (இணுவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - அ.சித்திரா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).

**சிறுவர் தின கவிதைப் போட்டி**

**பிரிவு I**

1ஆம் இடம்-வி.சுகன்ஜா (இணுவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - அ.சாம்பவி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), 3 ஆம் இடம் - செ.சங்கீதா (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**பிரிவு II**

1 ஆம் இடம் - க.ரேவதி (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), 2 ஆம் இடம் - சி.மாதுமை (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3 ஆம் இடம் - ஜெ.தர்மிளா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை).

**பிரிவு III**

1 ஆம் இடம் - கு.அனுஜா (இணுவில் இந்துக் கல்லூரி).

**முதியோர் தின கட்டுரை போட்டி**

**பிரிவு I**

1 ஆம் இடம் - ச.மேரி கனுஷா (ஏழாலை சைவ மகாஜனக்கல்லூரி), 2 ஆம் இடம் - ம.தக்ஷாயினி (இணுவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - ஜெ.தட்சாயினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**பிரிவு II**

1 ஆம் இடம் - மு.துவாரகா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), 2 ஆம் இடம் - வீ.இமாஜினி (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3 ஆம் இடம் - க.நிருபா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

**பிரிவு III**

1 ஆம் இடம் - க.கஜேந்தினி (இணுவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - ந.சுகதீபன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3 ஆம் இடம் - அ.லவாணி (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**முதியோர் தின கவிதை**

**பிரிவு I**

1ஆம் இடம் ச.சக்திதர்ஷினி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), 2 ஆம் இடம் - இ.மாதங்கி (இணுவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - ப.ஜெயந்திகா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

**பிரிவு II**

1ஆம் இடம்-ஜெ.கவிதரா (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2 ஆம் இடம் - க.பிரதீபா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), 3 ஆம் இடம் - இ.மதுசூதனன் (இணுவில் இந்துக் கல்லூரி).

**பிரிவு III**

1ஆம் இடம்-வா.றஜிதா (இணுவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - ச.மஜீபன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3 ஆம் இடம் - தே.றஜிதா (இணுவில் இந்துக் கல்லூரி). (101)

# வெள்ளவாய்க்காலை திருத்துமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை

வடமராட்சி—

பருத்தித்துறை - மாலுசந்தி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வெள்ளவாய்க்கால் நீண்ட காலம் திருத்தப்படாத நிலையில் உள்ளதால் அந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருவமழை பெய்யத்தொடங்கி இருப்பதால் மாலுசந்தி பிள்ளையார் கோவிலடியை நோக்கிச் செல்லும் வெள்ளவாய்க்கால் திருத்தப்படாத நிலையில் மழை வெள்ளம் வாய்க்கால் ஊடாக செல்லும் வீதியில் தேங்கி நிற்கின்றது. இதனால் அந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குள்ளும் நீர் செல்லும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த வெள்ள வாய்க்காலை புனரமைப்புச் செய்து தருமாறு, வீதியூடாக போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (12)

## கூடைப் பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் யாழ், மாவட்ட ரீதியாக ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணியினர் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் தெரிவித்தார்.

## இலவச மருத்துவ சேவை

ஆழியவளை—

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையால் வடமராட்சி கிழக்கில் சுகாதார வசதி குறைந்த பகுதிகளுக்கு இலவச நடமாடும் மருத்துவ சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இப் பிரதேசத்தின் போக்கறுப்பு, நித்தியவெட்டை, கட்டைக்காடு ஆகிய கிராமங்களிலேயே இவ்வாரம் முதல் இச்சேவை நடத்தப்படவுள்ளது. (122)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்—

2ஆம் லெப். மாலதி நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தென்மராட்சிக் கிளையால் தென்மராட்சியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்தோடு, அதேபகுதியிலுள்ள முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும் இன்று காலை 11 மணியளவில் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

## வாணி விழா

புத்தூர்—

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்ந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்படும் வாணி விழா நாளை மறுதினம் காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து மன்றத்தின் தலைவர் சு. ரகிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியருமான சிறுவைக்கிழார் சைவப்புலவர் இ.செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் இந்து காலாசார அமைச்சு உத்தியோகத்தர் செல்வி சி.மகிந்தினியின் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

## சிரமதானப் பணிகள்

சங்கானை—

சூழல் தூய்மை பேணும் தினத்தை யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது. இதன் பொருட்டு கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்தச் சிரமதான நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், உதவிப்பிரதேச செயலர் திருமதி தே.பாபு உட்பட கிராமசேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலகப் பணியாளர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். பிரதேச செயலகச் சுற்றாடல் உட்பட சங்கானை சந்தைப் பகுதிகளையும் இவர்கள் சிரமதானம் செய்தனர்.(48)

**பேராசிரியர் என்.சண்முகலிங்கனின்**

இசைக் கனிவான

**நவராத்திரிகால பாடல்கள்**

சிறப்புத் தள்ளுபடி விலையில்




கிடைக்கும் இடம்

**இசை உலகம் - Music World**

பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்**

**கற்றல் கற்பித்தல் தர உள்வீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டிப் பரிசளிப்பு விழா - 2005**

இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
காலம் : 10.10.2005 திங்கட்கிழமை
நேரம் : மாலை 3.00 மணி
தலைவர் : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர் : திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
சிறப்பு விருந்தினர் : திரு.கே.சிவராமலிங்கம்
(முகாமையாளர், இலங்கை வங்கி, 2 ஆம் கிளை, -யாழ்ப்பாணம்)
திருமதி.ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)
(C/4717)

விளம்பர அனுசரணை :-
வேல் முருகன் சைவ உணவகம் → பலாலி வீதி, திருநெல்வேலி.

# யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வித் தரம் வீழ்ச்சியடைவதற்கு ஆசிரியரைக் குற்றம் சாட்ட முடியாது

## பேராசிரியர் சபா ஜெயராசா தெரிவிப்பு

ஆழியவளை—

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் கல்வித் தரம் பின்தங்கிய நிலையில் சென்று கொண்டிருப்பதற்கு ஆசிரியர்கள் மீது குற்றம் சாட்டிவிடமுடியாது. கல்வித் தரத்தை தீர்மானிப்பதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன.

தென்னிலங்கைப் பாடசாலைகளுக்குக் கிடைக்க வேண்டிய சகல வளங்களும் கிடைக்கின்றன. ஆனால், யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வளப்பற்றாக்குறையுடன் பாடசாலைகள் இயங்குவதோடு, கடந்த காலங்களில் யாழ். குடாநாடு பல்வேறு இடப்பெயர்வுகளையும், இராணுவ நடவடிக்கைகளையும் சந்தித்து நெருக்கடியான நிலைக்கு உட்பட்டு வந்துள்ளது என பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா தெரிவித்தார்.

யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சா/தா பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளையும், அதற்குப் பொறுப்பான அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தனது உரைளயில் -

ஆசிரியர்களைப் பொறுத்தளவில் 95 வீதமானவர்கள் தங்களது பணிகளை சிறப்பாகச் செய்கின்றார்கள். ஆசிரியருக்குரிய இது போன்ற ஊக்குவிப்புக்கள் போதுமானதளவு வழங்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இதேவேளையில் - ஆரம்பக் கல்வி மீது அதிக கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

யாழ்ப்பாணத்தின் கல்விநிலை இன்று ஆபத்தின் நிலையில் உள்ளது. தக்க தருணத்தில் இப்படிப்பட்ட பாராட்டு விழாக்களை நடத்தி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை சகலரும் எடுக்க வேண்டியது காலத்தின் இன்றைய தேவையாகும் எனத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் செல்வி தி. பெரியதம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - வரவேற்புரையை வடமராட்சி கல்வி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும், சிறப்புரைகளை வலயக் கல்விப் பணிப்பாளர்களும் ஆற்றினர்.

சுமார் 500 ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 40 பாடசாலைகள் கேடயங்களைப் பெற்றுக்கொண்டன. (122)

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

**விசேட விலைக் குறைப்பில் புத்தகங்கள்**
**இம்மாதம் 31 ஆம் திகதி வரை**

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
**அகவிழி**
ஆசிரியத்துவ நோக்கு...
AHAVILI, 3, Torrington Avenue, Colombo-7, Sri Lanka. Tel.: 011-2506272 E-mail : ahavili@viluthu.org

**BOOK LAB**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(C/4683)

# தொண்டமானின் ஆதரவை இழக்க அமைச்சர் சூரியாராச்சியே காரணம்!

## சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு —

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இழக்க நேரிட்டதற்கு பிரதிஅமைச்சர் சிறிபதி சூரியாராச்சியே காரணம் என்றும் -

இதனால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலிருந்து இவரை உடனடியாக நீக்கவேண்டுமென்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனமைக்கு, சிறிபதி சூரியாராச்சி கூறியிருந்த கருத்துக்களே காரணம். ஆறுமுகம் தொண்டமானும், ரவூக் ஹக்கீமும் ஆதரவு வழங்காவிடினும், மஹிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறமுடியுமென மஹிந்த தலைமைதாங்கிய கூட்டத்தில் சூரியாராச்சி தெரிவித்திருந்தார்.

மஹிந்தவுக்கு - தொண்டமான் ஆதரவளிக்கக் கூடிய நெகிழ்வுத்தன்மையுடன் இருந்த நேரத்தில், பிரதியமைச்சர் இப்படியான கருத்தை வெளியிட்டதால் தொண்டமான் தனது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கத் தீர்மானித்ததாகவும் அந்த அமைச்சர்கள் கூறினர்.

இந்த விடயம் குறித்து அறிந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீர, பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சி மீது தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானிடம் மன்னிப்பும் கேட்டார். சூரியாராச்சிக்கு போதிய அரசியல் அனுபவம் இல்லையென்றும், அவர் கூறுவதைப் பொருட்படுத்த வேண்டாமென்றும் தொண்டமானை அமைச்சர் சமரவீர கேட்டுக்கொண்டார். எனினும், பிரதமரின் முன்னிலையில் தங்களை ஒருவர் விமர்சிக்கும்போது, தங்களின் ஆதரவை அவருக்கு வழங்க முடியாது என்று ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

இ.தொ.கா தலைவரின் நிலைப்பாட்டை அமைச்சர் மங்கள சமரவீர பிரதமருக்கு தெரியப்படுத்தியபோது, சிறிபதியை தனது தேர்தல் வேலைகளில் புகுத்திய மங்கள சமரவீரவின் மீது கோபத்தைக் காண்பித்ததாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து பிரதமரைச் சந்தித்த சில அமைச்சர்கள், தேர்தல் நடவடிக்கைகளிலிருந்து சிறிபதியை ஓரங்கட்டுமாறு மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

## தேசப்பற்று இயக்கத்தினுள் பிளவு!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக எழுந்த சர்ச்சையால் - தேசிய தேசப்பற்று இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க - தேசப்பற்று இயக்கத்தின் அமைப்பாளரான வண. எல்லே குணவன்ச தேரர் முடிவு செய்துள்ளார்.

இதேவேளை, ஏனையோர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவுள்ளனர். இந்த விவகாரத்தில் தேசப்பற்று இயக்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

எல்லே குணவன்ச தேரர் ஐ.தே.கவின் பிரசார முகாமையாளரான சிறிசேன குரேயுடன் இணைந்து பிரசாரப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

# போதிய அதிகாரங்கள் இல்லையாம்; பொருமுகிறார் தேர்தல் ஆணையாளர்!

கொழும்பு —

தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தல் உட்பட, பல்வேறு விடயங்கள் தொடர்பாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போதுமானதாக இல்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கவலை தெரிவித்தார்.

தேர்தல் ஆணையகத்தின் அதிகாரங்கள் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது-

தேர்தல் ஆணையாளருக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி செயற்படுகையில், எந்தவொரு வேட்பாளருக்கேனும் அநீதி இழைக்கப்படுமாயின், அவர் உயர் நீதிமன்றத்தில் உரிமை மனுவைத் தாக்கல் செய்யலாம். இலங்கை அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கமையவும், ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கமையவும், எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தி சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்தவுள்ளோம்.

இருப்பினும், தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்களில் தற்போதைய அதிகாரங்கள் போதுமானதாக இல்லை.

தேர்தல் நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்படும் செயற்படுகாளால் எந்தவொரு வேட்பாளரதும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்து, அவருக்கு நியாயம் வழங்குமாறு உத்தரவிடுமாயின் அந்த உத்தரவை உடனடியாகச் செயற்படுத்தி, குறிப்பிட்ட நபருக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐந்து தற்கொலைப் படையினர் கொழும்பு நகருக்குள் ஊடுருவலாம்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அண்மித்த காலப்பகுதியில் தாக்குதல்களை நடத்துவதற்காக, விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஐவரும் மற்றுமொரு விடுதலைப் புலிகளின் உறுப்பினரும் கொழும்புக்கு வந்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் தாக்குதல்களை நடத்தவுள்ள விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் தொண்டமனாறு கட்டுப் புலத்தைச் சேர்ந்த நவரட்ணராஜா உதயராஜ் அல்லது உதயன் என்று கண்டறியப்பட்டுள்ளதாம்.

இவர் இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி லெப். கேணல் முத்தலிப்பை கொல்ல வந்தவராவார். இவர் அடிக்கடி சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடமாடுவதாக குறிப்பிட்டுள்ள அந்தப் பத்திரிகை இந்தத் தாக்குதல்களை நடத்த விழி அல்லது விமலமலர், மேகலா, தனிதா, மங்களராணி அல்லது மஞ்சுளா, விஜிதா நாகேஸ் அல்லது சபீலா ஆகியோர் வந்துள்ளனர்.

இவர்களில் சிலர் வள்ளிபுனத்தில் வசிப்பவர்களாவர். இவர்கள் கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், வெள்ளவத்தை, தெகிவளை, மத்திய கொட தேசிய வீடமைப்புத் தொகுதி போன்ற இடங்களில் தங்கியுள்ளனர் எனவும்,

இவர்கள் அனைவருக்குமான இரகசிய கலந்துரையாடலொன்று கோட்டைப் பிரதேசத்திலுள்ள தமிழருக்குச் சொந்தமான விடுதியில் இடம்பெற்றுள்ளதுடன்.

இந்தக் கலந்துரையாடலுக்கு விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரண்டாவது பொறுப்பாளர் கபிலம்மானின் ஆலோசனைகளுக்கமைய இளம்பிறையன் என்பவர் உட்பட, பலர் கலந்து கொண்டுள்ளனர் என்றும் அந்தப் பத்திரிகையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (தே)

# வேட்பாளர்கள் விரும்பினால் மட்டுமே வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள்

## தேர்தல் ஆணையாளர் முடிவு

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விரும்பினால் மட்டுமே, சர்வதேச கண்காணிப்பாளர்களை இம்முறை தேர்தல் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவது என்று - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முடிவு செய்திருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் கண்காணிப்பிற்கு வேட்பாளர்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வது சட்டப்படி அவசியமானது என்பதால், இது தொடர்பாக வேட்பாளர்களின் விருப்பத்தை அறிவதற்காக அடுத்த வாரம் விசேட கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது.

வேட்பாளர்களின் விருப்பம் கிடைக்குமானால் - சுமார் 75 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நாடளாவிய ரீதியில் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுவர்.

அதுதவிர, உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் ஆயிரக்கணக்கான கண்காணிப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்புக் கடமைகளில் பங்கேற்கவுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்புக் கடமைகளுக்கென - கண்காணிப்பாளர்களை அனுப்புமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், பொதுநலவாய அமைப்பிற்கும், ஆசிய தேர்தல் அதிகாரிகள் சங்கத்திற்கும் தேர்தல் ஆணையாளர் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுத்திருந்தார்.

இதில் ஐக்கிய நாடுகள் அமைப்பானது அதன் பாதுகாப்புச் சபையின் அனுமதியைப் பெறுவதற்குப் போதிய கால அவகாசம் இல்லாததால் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபட வரமுடியாது என்று ஏற்கனவே அறிவித்துவிட்டது.

## சுவரொட்டிகளை அகற்றிய பொலிஸாருக்கு எச்சரிக்கை!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட நேற்றுமுன்தினம் தேர்தல் சட்டவிதிகளைமீறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும், கட்அவுட்களையும் அகற்றிய பல பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகப் பல்வேறு அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் விடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அச்சுறுத்தலை சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சில அரசியல்வாதிகள் - பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை மிக மோசமாக திட்டியிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

எந்தத் தடை வந்தாலும் சுவரொட்டிகளையும், கட்அவுட்களையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அந்த அதிகாரி, அடுத்துவரும் நாட்களில் இவ்விதம் அச்சுறுத்தல் விடுப்பவர்களுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

## பொலிஸ் அதிகாரி படுகொலை; சட்டமா அதிபருடன் ஆலோசனை!

கொழும்பு —

யாழ். பொலிஸ்நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு இரகசிய பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான அறிக்கையை சட்ட மா அதிபரிடம் கையளித்து, இது தொடர்பாக எடுக்கவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து அவரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் இரகசியப் பொலிஸார் முடிவுசெய்துள்ளனர்.

இந்த கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப்புலி உறுப்பினராகக் கருதப்படும் கோபி எனப்படும் வீரபாண்டியன் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார். எனினும், அடையாள அணிவகுப்பின்போது சாட்சியாளர்கள் அவரை அடையாளம் காட்டவில்லை. இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் சிலரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

# ஐ.நா.சபையையும் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோருகிறது அரசு!

கொழும்பு —

விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபைமூலம் நடவடிக்கை எடுப்பதற்கு, இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சீனாவும், பிரிட்டனும் - இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு சாதகமாகப் பதிலளித் துள்ளதாக தெரியவருகிறது.

இதனிடையே பிரான்ஸுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரான்ஸ் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இது குறித்து கலந்துரையாடியதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்றிருந்த சந்திரிகா, விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்துகொள்ளச் சென்றிருந்த முக்கிய வெளிநாட்டுத் தலைவர்களுடன் சந்திரிகா இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிகிறது.

ஐக்கிய நாடுகள் சபை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கையில் எப்படியேனும் வெற்றிபெற்றுவிடவேண்டும் என அரசாங்க தரப்பு முனைப்புக் காட்டிவருவதாகக் கூறப்படுகிறது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தலைமை அடுத்த ஆண்டு டென்மார்க்கிற்கு வழங்கப்படவுள்ளது.

டென்மார்க்கில் செயற்படும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுக்குழு ஒன்றின் மூலம், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

தமிழ் மக்களை பலமிழக்கச் செய்துவிட்டு, தாங்கள் விரும்பிய தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதே அரசாங்கத்தின் திட்டம் எனவும் அரசியல் ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.


இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் பொது இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், இந்த விடயத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.



# 156 ஓட்டங்களால் உலக லெவன் அவுஸ்ரேலியாவிடம் படுதோல்வி!

JOHNNIE WALKER. SUPER SERIES AUSTRALIA 2005









மெல்பேர்ன் —

உலக லெவன் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி 156 ஓட்டங்களால் வெற்றிபெற்று, மூன்று போட்டிகள் கொண்ட தொடரை ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றைய ஆட்டத்தில் கடிச்சுக்கு ஓய்வு வழங்கப்பட்டதால், கில்கிறிஸ்டுடன் தொடக்க வீரராகக் களமிறங்கினார் மைக்கல் கிளார்க்.

ஆட்டம் விறுவிறுப்பாகத் தொடங்கிய சற்று நேரத்திலேயே அவுஸ்ரேலிய அணியின் முதல் விக்கெட்டை உலக அணியின் பந்துவீச்சாளர் என்றினி எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

ஸ்கோர் 15ஆக மட்டுமே இருந்தபோது - முதல் விக்கெட்டாக வீழ்ந்த கிளார்க் 3 பந்துகளில் 3 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். அடுத்து கில்கிறிஸ்டுடன் அணித் தலைவர் றிக்கி பொண்டிங் இணைந்து கொண்டார்.

வழக்கம் போலவே பொண்டிங் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்ததால் - ஸ்கோர் விரைவாக உயர்ந்தது. அணியின் ஸ்கோர் 58ஐ எட்டியபோது - பொலக் வீசிய பந்தை அடித்து ஆட முற்பட்டபோது, அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் கில்கிறிஸ்ட்.

31 பந்துகளை எதிர்கொண்டு 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் கில்கிறிஸ்ட் 32 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பொண்டிங்குடன் மார்ட்டின் இணைந்தார். இருவரும் மெதுவாக அதேவேளை, நிதானமாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினர். இதனால், ஸ்கோர் உயர்வு மந்தமாகவே இருந்தது.

ஸ்கோர் 143ஐ எட்டியபோது - பொண்டிங்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. முரளிதரனின் பந்துவீச்சில் லாறாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 84 பந்துகளில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 68 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய சைமன்ஸ் - ஸ்கோர் 146ஐ எட்டியபோது ஒரே ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

முரளிதரனின் பந்துவீச்சில் சங்கஹாரவிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்தார். இதற்கிடையில் ஹூசே களமிறங்க - மறுமுனையில் நின்ற மார்ட்டின் ஸ்கோர் 148ஆக இருந்தபோது விற்றோரியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

44 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 33 ஓட்டங்களை இவர் எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய ஹூசே - வற்சன் ஜோடி இறுதிவரை நிலைத்து நின்று அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து அவுஸ்ரேலிய அணியை பலமான நிலைக்கு இட்டுச் சென்றது.

50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்களை எடுத்த அவுஸ்ரேலிய அணி சார்பில் - ஹூசே 75 பந்துகளில் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும்,

வற்சன் 66 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 66 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் பெற்றனர்.

15 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த உலக அணி பந்துவீச்சாளர்களில் முரளிதரன் 2, என்றினி 1, விற்றோரி 1, பொலக் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உலக லெவன் அணி தொடக்கத்திலேயே அதிர்ச்சியை எதிர்கொண்டது. தொடக்க வீரர் கைல் பிரெட் லீ வீசிய இரண்டாவது பந்திலேயே ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஷேவாக்குடன் சங்கஹார இணைந்தார். முதல் இரண்டு போட்டிகளிலும் நன்றாக ஆடிய சங்கஹார நேற்றைய போட்டியில் சற்று தடுமாறினார். இதனால், ஸ்கோர் 20ஆக இருந்தபோதே மக்ராவின் பந்தை மார்ட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சங்கஹார 15 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 13 ஓட்டங்களை எடுத்தார். இவரைத் தொடர்ந்து கலிஸ் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 27ஆக இருந்தபோது, உலக லெவன் அணிக்கு அடுத்தடுத்து இரண்டு அதிர்ச்சிகள்.

முதலாவது - லீ வீசிய பந்தை தடுத்தாட முற்பட்ட கலிஸ், 10 பந்துகளை எதிர்கொண்டு 2 ஓட்டங்களுடன் ஹூசேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தது - களமிறங்கிய லாறா வந்த வேகத்திலேயே டக் அவுட்டாகி பவிலியன் திரும்பினார். லீயின் பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்தார்.

27 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிக்குள் இருந்த உலக லெவன் அணிக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் ஷேவாக்கும், பிளின்ரொப்பும் ஆடத் தொடங்கினர்.

ஆனால், ஸ்கோர் 87ஆக இருந்துபோது - பிளின்ரொப் வற்சனின் பந்துவீச்சில் போல்டானார். இவர் 25 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து ராவிட் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 99ஆக இருந்தபோது, ஷேவாக் ரன் அவுட்டானார். இவரே உலக லெவன் அணியில் அதிகபட்ச ஓட்டங்களான 37 ஓட்டங்களை 40 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் பெற்றார்.

அடுத்து ராவிட்டுடன் இணைந்தார் பொலக். இவர் நின்றுபிடித்து நேரத்தைக் கடத்தியபோதும், ஓட்டங்களைக் குவிக்கமுடியவில்லை. இதற்கிடையே ஸ்கோர் 119 ஐ எட்ட ராவிட் பவிலியன் திரும்பநேரிட்டது.

லீயின் பந்தை மார்ட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த ராவிட், 38 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 16 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய விற்றோரி ஸ்கோர் 120ஆக இருந்தபோது ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். வற்சனின் பந்தில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பொலக் - அப்ரிடி ஜோடி இணைந்து ஆடியது. ஸ்கோர் 137ஐ எட்டியபோது - பொலக் வற்சனின் பந்துவீச்சில் கமரூன் வைற்றிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 27 பந்துகளில் 8 ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்த பந்திலேயே அப்ரிடி வற்சனின் பந்தில், மக்ராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க உலக லெவன் அணி 27.5 ஓவர்களிலேயே 137 ஓட்டங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தது. அப்ரிடி 8 பந்துகளில் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 16 ஓட்டங்களை எடுத்தார்.

156 ஓட்டங்களால் படுதோல்வியடைந்த உலக லெவன் அணி - அவுஸ்ரேலியாவிடம் மூன்று போட்டிகளையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் லீ 4, வற்சன் 4, மக்ரா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## விளையாட்டு











# உதைபந்தாட்ட விளையாட்டுக்கு நவீன தொழில்நுட்பம் தேவையில்லை

## றொனால்டோ சொல்கிறார்

டெரஸ்பொலிஸ் —



உதைபந்தாட்ட விளையாட்டில் காதில் கடுக்கன், பந்தில் கணினி ஷிப், செயற்கையான மைதானம் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் தேவையில்லை என பிறேசில் அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோ தெரிவித்தார்.

களத்தில் இருக்கும் வீரருக்கும் பயிற்சியாளருக்கும் தொடர்பு ஏற்படுத்த கடுக்கன் முறை அறிமுகமானது. அதாவது வீரர் தனது காதில் இலத்திரனியல் கடுக்கன் அணிந்து கொள்வார். இதன் மூல் இவரை பயிற்சியாளர் வோக்கி-டோக்கி மூலம் தொடர்பு கொள்ளமுடியும். இந்த முறைக்கு பிறேசில் நாட்டில் அதிக வரவேற்பு இல்லை. இது பற்றி அந்த அணியின் நட்சத்திர வீரரான றொனால்டோ கூறுகையில் -

காதில் ஏதாவது ஒன்றை அணிந்து விளையாடுவது மிகவும் கொடுமையானது. இதனால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை. பயிற்சியின் போது சொல்லிக் கொடுத்ததைப் பின்பற்றினாலே போதும். வீரரின் திறமையைப் பொறுத்துத்தான் முடிவு அமையும். பயிற்சியாளர் வோக்கி-டோக்கி மூலம் தரும் ஆலோசனை எல்லாம் பயன் தராது.

'பிபா' அறிமுகப்படுத்திய கணினி ஷிப் அடங்கிய பந்து (ஷிப் இருப்பதால், பந்து கோல் லைனைத் தாண்டியதா என்பதை தெளிவாக அறியமுடியும்), செயற்கை இழையிலான மைதானங்களில் அதிக ஆர்வம் இல்லை. இதைக் காட்டிலும் எளிதான முறை உண்டு. அது நடுவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான்.

இருவர் விளையாடும் போட்டிகளில் கூட நிறைய நடுவர்கள் இருக்கிறார்கள். ஆனால், உதைபந்தாட்டத்தில் இரண்டு லைன்ஸ்மன், ஒரு நடுவர் மட்டுமே உள்ளனர். இவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால், சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். செயற்கை இழையிலான மைதானங்களில் பயிற்சி செய்திருக்கிறேன்.

ஆனாலும், புல்தரையில் விளையாடுவது எனக்கு றொம்பப் பிடிக்கும். இவ்வாறு றொனால்டோ கூறினார்.

# காயம் என்று நடிக்கிறாரா கங்கூலி? இந்திய பத்திரிகை கிளப்பும் சந்தேகம்!

மும்பை —



சலஞ்சர் கிண்ண கிரிக்கெட்டில் விளையாடாமல் இருக்க, கங்கூலி திட்டமிட்டு கையில் வலி என்று நாடகமாடுகிறாரா என்பதற்கு கிரிக்கெட் சபை விளக்கமளித்துள்ளது.

மொஹாலியில் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை சலஞ்சர் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இதில் சிரேஷ்ட இந்திய வீரர் அணிக்கு கப்டனாக கங்கூலி அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்த அணியில் டெண்டுல்கரும் இடம்பெற்றுள்ளார். ஆனால், திடீரென கங்கூலி முழங்கை வலிக்கிறது என்றார். பின்பு அவர் சலஞ்சர் கிண்ண போட்டியில் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. சிரேஷ்ட இந்திய அணிக்கு புதிய கப்டனாக மொகமட் கைவ் தெரிவு செய்யப்பட்டார்.

சலஞ்சர் கிண்ண போட்டியில் கங்கூலி விளையாடாமல் ஒதுங்கிக் கொண்டது பற்றி நேற்றுமுன்தினம் இந்திய பத்திரிகைகளில் பலவாறாக செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

கங்கூலி திட்டமிட்டே சலஞ்சர் கிண்ண போட்டியைப் புறக்கணிப்பதற்காக கை வலிக்கிறது என்று நாடகமாடி ஏமாற்றிவிட்டார். இந்திய கிரிக்கெட் சபை டொக்ரர் ஆனந்த் ஜோஷி, உடற்பயிற்சி நிபுணர் ஜோன் குளோஸ்டர் ஆகியோரைச் சந்திப்பதற்கு முன்பே கங்கூலி சலஞ்சர் கிண்ண போட்டியில் விளையாடுவதில்லையென முடிவு செய்துவிட்டார்.

எனவே, அவருக்கு 10 நாள் ஓய்வு என அறிவிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது என்று கூறப்பட்டிருந்தது.

மேலும் அந்த பத்திரிகை செய்திகளில், பல்வேறு உலக நாட்டு அணிகளுடன் விளையாடுகிற இந்திய அணிக்கு கப்டனாக இருக்கிற நான், இந்த சிறிய சலஞ்சர் கிண்ணப் போட்டியில் விளையாடுவதா என்ற அகம்பாவத்தால் கங்கூலி இந்தப் போட்டியை வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டார்.

இலங்கையுடன் நடக்கும் போட்டிக்கு விளையாட வந்துவிடுவேன் என்று கங்கூலி சொல்கிறார். ஆனால், சலஞ்சர் கிண்ண போட்டிக்கு மட்டும் காயம் என்கிறார். இப்போது புரிகிறதா? என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படி பத்திரிகைகளில் வந்துள்ள செய்திக்கு நேற்றுமுன்தினம் இந்திய கிரிக்கெட் சபை சார்பாக டொக்ரர் ஜோஷி மறுப்பு வெளியிட்டார். கங்கூலி கையில் காயம் என்று நடிக்கவில்லை. உண்மையிலேயே அவருடைய கையில் காயம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இது டெண்டுல்கருக்கு ஏற்பட்ட காயம் போன்றது அல்ல.

எனவே, கங்கூலி விரைவில் குணமடைந்துவிடுவார். அவர் நன்கு உடல்நலம் பெறுவதற்காகவே ஓய்வு கொடுத்திருக்கிறோம் என்று டொக்ரர் ஜோஷி கூறினார்.

# சமூகத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது!

## தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.ஜே.தேவராஜா

தென்மராட்சி—

ஆசிரியர்களை வணங்குவது, கௌரவிப்பது என்பது பிற கலாசாரங்களில் கூட மிகவும் மேம்பட்டதாக அமைந்திருக்கிறது. பிற கலசாரங்களில் இருந்து நல்ல விடயங்களை நாம் எடுத்துக் கொள்வது பிழையல்ல. எங்கெங்கிருந்து எவ்வளவு நல்ல விடயங்களை எடுக்கலாமோ, அவ்வளவு விடயங்களையும் நாம் எடுத்து, எம்மை வளம்படுத்திக் கொள்வது மிகவும் ஆரோக்கியமான ஒரு செயலாகுமென தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.ஜே.தேவராசா தெரிவித்தார்.

அண்மையில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் மாணவன் க.தீபக் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - இன்று ஆசிரியர்களது கடமைகளைப் பொறுத்தமட்டில், மூன்று முறைகளில் அவை வெளிப்படுத்தபட வேண்டியதாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையிலும்- ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமிடையிலும்- ஆசிரியர்களுக்கும், கல்வி நிர்வாக அதிகாரிகளுக்குமிடையி லும் என்ற வகையில் ஆசிரியர்களது செயற்பாடுகள் வெளிப்பட்டு நிற்கவேண்டிய நிலைமை இன்று காணப்படுகிறது.

ஆசிரியர்கள் மாணவர்களோடு தொடர்பு கொள்ளும் போது - அவர்கள் கற்று, நல்ல பிரஜைகளாக வாழ நெறிப்படுத்துபவராக செயற்பட வேண்டியவராகின்றார். கற்பிப்பது ஆசிரியர்களது கடமை என்று கூறுவதைவிட, மாணவர்கள் கற்றுக் கொள்ள வழிகாட்டுவதே ஆசிரியர்களது கடமையாக எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் ஒவ்வொருவரும் தன்னாலானவகையில் சமூகத்தை மேம்படுத்துவதற்கு வழிகாட்டுபவர்களாகவே ஆசிரியர்கள் கருதப்படுகிறார்கள்.

தனித்து ஆசிரியர்களால் மட்டும் மாணவர்களை இந்தவகையில் வளர்த்தெடுக்க முடியாது. மாணவர்களது நேரத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே அவர்கள் ஆசிரியர்களுடன் செலவிடக் கூடியதாக இருக்கிறது. பெரும் பகுதி நேரம் பெற்றோர்களுடனேயே செலவிடப்படுகிறது. அந்த நேரங்களில், அந்த மாணவர்களை எவ்வாறு வழிப்படுத்துவது நல்லது என்பது பற்றி பெற்றோருக்கு வழிகாட்ட வேண்டியவர்களாகவும் ஆசிரியர்களே உள்ளனர். இந்தப் பொறுப்பும் ஆசிரியர்களையே சார்ந்திருக்கிறது.

ஆசிரியர்களுக்கும், கல்வி நிர்வாக அதிகாரிகளுக்குமிடையிலுள்ள தொடர்பானது- ஆசிரியர்கள் தமது கடமைகளை, செயற்பாடுகளைத் திறம்பட நடத்துவதற்கு வழி காட்டுவதாகவே அமைய வேண்டும். இன்றைய பத்திரிகை ஒன்றில் ஆசிரியர்களுக்கும், கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்புகள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன என்ற வகையிலான செய்திக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இது உண்மையானதாகக் கூட இருக்கலாம். கல்வி நிர்வாக அதிகாரிகளது மொத்தத் தொகையில், ஒரு வீத மானவர்களது தொடர்புகள் அவ்வாறான முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கக்கூடும். எனினும், தொண்ணூற்றொன்பது வீதமான கல்வி நிர்வாக அதிகாரிகளது தொடர்புகள் ஆசிரியர்களது செயற்பாடுகளை ஊக்குவிப்பதாக, மேம்படுத்த உதவுவதாகவே அமைந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் கல்வி நிர்வாக அதிகாரிகள் என்பவர்கள் கூட ஆரம்பத்தில் ஆசிரியர்களாக இருந்து வந்தவர்களே என அவர் மேலும் தெரிவித்தார். (31)

# பரிசளிப்பு விழாவும் 'படி' இதழ் வெளியீடும்

யாழ்ப்பாணம்—

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி -கற்றல், கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல்சாதன உருவாக்கப்போட்டியின் பரிசளிப்புவிழா இன்று மாலை 3 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கியின் இரண்டாம் கிளை முகாமையாளர் கே.சிவராமலிங்கம், இராமநாதன்கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். இந்த நிகழ்வில் 'படி' ஆசிரிய வாண்மை இதழ் வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது. கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

# விவசாயிகள் ஒன்றிணைவதன் மூலம் அவர்களது பிரச்சினையைத் தீர்க்கலாம்

## வலி.தெற்கு பிரதேச செயலர் சி.திருவாகரன்

உடுவில்—

விவசாயிகளுக்குப் பல பிரச்சினைகள் உள்ளதை அரசாங்க அதிகாரிகளாகிய நாம் நன்கு அறிவோம். விவசாயிகள் பலரும் ஒன்று திரள்வதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இந்தக் கிராமம் ஒரு விவசாய கிராமமாகையால் இங்கு கைத்தொழில் நிலையங்களை அமைக்க முடியாது. ஆகவேதான் இந்தக் கிராமிய உற்பத்தி மையத்தில் விவசாயிகளுக்கு வேண்டியபயிற்சிகள், ஆலோசனைகள், வழங்கப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு திறம்பட நடத்தவேண்டியது இந்தப் பகுதி விவசாய சம்மேளனத்தின் பாரிய பொறுப்பாகும்.

கிராமிய சிறு கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் - கந்தரோடையில் அமைக்கப்பட்டுள்ள கிராமிய உற்பத்தி மையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வலி. தெற்கு பிரதேச செயலர் சி. திருவாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

கந்தரோடை விவசாயிகள் சம்மேளன செயலாளர் செ.மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில்- பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றும் போது -

இன்று விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விரைவில் சந்தைப்படுத்த முடியாமலும், உற்பத்திச் செலவுக்கேற்ப விற்பனையில் இலாப மீட்டமுடியாமலும் திண்டாடுகின்றனர். காரணம் இங்கிருந்து தென்பகுதிக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் போது- பல இடங்களில் இறக்கி ஏற்றப்பட வேண்டியிருப்பதால், பொருட்கள் பழுதடைவதுடன், உரிய நேரத்தில் சந்தை விலைக்கு விற்க முடியாமலும் உள்ளது. பல விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களை மீண்டும் செலுத்த முடியாது கஷ்டப்படுகின்றனர். இப்படியானவர்களுக்கு இந்த மையம் உரிய ஆலோசனைகளை வழங்கவேண்டும். உற்பத்திப் பொருட்களைத் தனியே வாங்கி விற்கும் நிலையமாகச் செயற்பட்டாலும், உற்பத்தியை ஊக்குவிக்கும் நிலையமாகவும் இந்த நிலையம் செயற்படல் வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் பேசுகையில் -

உற்பத்தி அதிகரிப்பு, சந்தைப்படுத்தல் இரண்டும் ஒருங்கிணைந்தாலே விவசாயிகள் நலமடைவர். மாவட்ட ரீதியாக விவசாய சம்மேளனம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அப்படியான அமைப்பு ஏற்பட்டால் சந்தைப்படுத்தலை இலகுவாக்கலாம். ஏ9 பாதை திறக்கப்படமுன் விவசாய திணைக்களமே 'இங்குள்ள விவசாயிகளுக்கு - உரம், கிருமிநாசினி, விதைபொருட்கள் போன்றவற்றை வழங்கிக் கொண்டிருந்தது. ஆனால், பாதை திறக்கப்பட்டபின் - பல கம்பனிகள் இங்குவந்து, தமது பொருட்களை கடனுக்கு கூட வழங்குகிறது. அவர்கள் தனி ஆட்கள் கடன் வழங்குவர். ஆனால், திணைக்களத்தால் அவ்வாறு கடன் வழங்க முடியாது. கடன் வழங்குவதாயின் அனைத்து கமக்காரருக்கும் கடன்கொடுக்க வேண்டும். இந்தக் கடனை அனைவரும் திருப்பிச் செலுத்துவார்களா?

1979 இல் மக்கள் வங்கி, இலங்கை வங்கியில் பெற்ற கடன்கள் கூட இன்னும் நிலுவையாக உள்ளன. இந்த உற்பத்திமையம் டம்புள்ள, மீகொட போன்ற பிரபல தென்பகுதி சந்தைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அங்குள்ள பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் ஏற்றுமதி செய்தால் அதிக இலாபமீட்ட முடியும் எனத் தெரிவித்தார்.


ஓய்வு பெற்ற அதிபர் தற்பரானந்தன் வரவேற்புரை வழங்கினார். கட்டடம் அமைப்பதற்கு காணி அன்பளிப்புச் செய்த சோமேஸ்வரசர்மா மற்றும் மூத்த விவசாயிகள் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (101)




கே.கே.எஸ்ஸில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் வடபிரதேச காரியாலயத்தை, மின்சார சபையின் வட.பிரதேச உதவிப் பொது முகாமையாளர் சண்முகநாதன் நாடவை வெட்டித் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.



அண்மையில் இளைப்பாறிய யாழ்.கால்நடை வைத்தியசாலைப் பணிப்பாளர் எம்.தங்கராஜாவின் சேவைநலன் பாராட்டு விழாவில் வைத்தியர் தம்பதிகளுக்கு பணியாளர் ஒருவர் அன்பளிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம். (14)



ஆறுகால்மடம் யாழ்.கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவியான கா.மனோசியாவுக்கு பிரதமவிருந்தினர் ஞானாம்பிகை சிவபாதசுந்தரம் தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (91)



வடமராட்சி போரூட் ஒ ளி நிறுவனமும், வடமராட்சி கல்வி வலயமும் இணைந்து நடத்திய கண்காட்சிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கன்காட்சி நிகழ்வை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (12)

# 56 ஆவது இராணுவ தினத்தையொட்டி யாழ்.குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகள்!

இலங்கை இராணுவத்தின் 56 ஆவது ஆண்டை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணத்தில், இராணுவத்தால் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ். பொது நூல் நிலையத்தில் - யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி சுனில் தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, இராணுவத்தினரால் யாழ்.பொது நூலகத்துக்கு ஒரு லட்சம் ரூபா காசோலை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 52 ஆவது பிரிகேட் அதிகாரி ஜெகத் ஜயசூரிய, 53 ஆவது பிரிகேட் அதிகாரி நிமல் ஜெயசூரிய, 512 ஆவது பிரிகேட் அதிகாரி கேணல் சுகந்த ஜயங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இராணுவ தினத்தை முன்னிட்டு, இராணுவத்தினர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானமும் செய்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஆறு



பெயர் : சி.சிவருஜன்
முகவரி : நீர்வேலி தெற்கு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------
இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றோர் ஒப்பம்








# சூல வைரவா சுழட்டிக் குத்தடா....

## பகுதி II



ச.முருகானந்தன்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

ஆனந்தனின் தங்கை சகுந்தலாவின் கணவர் தயாளசிங்கமும் கடமை நேரத்தில் அலுவலகத்தில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, அவள் விதவைக் கோலம் அடைந்த பின்னர் ஆனந்தனின் மனதில் ஒரு எண்ணம் மெல்ல மெல்ல துளிர் விட்டது.

நடந்து கொண்டிருக்கும் நாச யுத்தத்தினால் விதவையான ஆயிரக்கணக்கான இளம் பெண்களில் ஒருத்தியைத்தான் மணம் செய்வது என்ற எண்ணமே அது. ஒரு விதவையை மணம் செய்ய வேண்டும் என்று நினைத்ததும் அவன் மனதில் வனிதா தான் தோன்றினாள். ஆனால் வனிதா விதவையா? இல்லையா? என்று தெரியாத நிலையில் அவளை அணுகுவதே சிக்கலாக ஆனந்தனுக்குப்பட்டது. எனினும் மனதால் நெருங்கிவிட்டான்.

பொங்கல் பானைகளின் அடுப்பு விளாசி எரிந்து கொண்டிருந்தது.

அந்தப் பரந்த வயல் வெளியில் வீசிக்கொண்டிருந்த காற்று ஆனந்தனின் மனதிலும் தென்றலாய் வீசி ஆனந்தத்தை அளித்ததற்கு வனிதாவின் தரிசனமே காரணம்! அங்கே நின்று கொண்டு ஒவ்வொரு இளம் விதவைகளையும் தரிசித்தபடி மனதுக்குள்ளே கொண்டு வந்து கணக்குப் போட்டுப் பார்த்தாள். அவன் நின்று கொண்டிருந்த இடத்துக்கு கொஞ்சம் தள்ளி ஒரு கைக்குழந்தையுடன் பவித்திரா நின்று கொண்டிருந்தாள். அந்தக் குழந்தை அவள் பிடியிலிருந்து விலகி சிறிது தூரம் தத்தித்தத்தி நடந்து சென்றுவிட்டுத் திரும்பி விரைவாக காலடி எடுத்து வைத்துத் தாயின் கால்களை மறுபடியும் கட்டிக்கொண்டது. அந்தக் குழந்தையின் அழகு அவனைக் கட்டி இழுத்த போதிலும் ஏனோ பவித்திராவின மனம் லயிக்கவில்லை. இப்படியே கௌசல்யா, மல்லிகா, ராணி என சிலர் அவனது தரிசனத்தில் வந்து போயினும் இறுதியில் மனது வனிதாவிலேயே லயித்து நின்றது.

பூசாரியிடம் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிய வனிதா பவித்திராவின் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள். அதிக அலங்காரம் இல்லாவிட்டாலும் அவள் அழகாக இருந்தாள். பூசாரி கொடுத்த பூ இப்போது அவளது கூந்தலை அழகுபடுத்திக்கொண்டிருந்தது. பூ செடியிலிலே பூத்திருந்த போது இருந்த அழகிலும் பார்க்க, அவளது கூந்தலிலே வெகு அழகாக இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இன்று அவளது போக்கு சற்று மாறுபட்டதாக அவனுக்குத் தோன்றியது.

ஆனந்தன் அவளை நோக்கிப் புன்னகைத்த போது, அவள் சட்டென்று பார்வையைத் தாழ்த்தினாள் எனினும், பின்னர் நிமிர்ந்து இவனை வைத்த கண் வாங்காமல் நோக்கிய போது இவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவளது அழகின் நிறைவு ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் தென்பட்டது. அலைபாயும் கண்களுடனான அவளது செவ்விளநீ நிற மேனி அழகை விழுங்குமாப் போல் பார்த்துக்கொண்டு, தனது கூச்ச சுபாபமெல்லாவற்றையும் புறம் தள்ளிக்கொண்டு அவளின் கிட்டவாய்ப் போனான் ஆனந்தன்.

'வனிதா' என்று அழைத்தபடியே தனது கையிலிருந்த கச்சான் சரையை அவளிடம் நீட்டியபோது அவள் மறுப்பின்றி வாங்கிக் கொள்ளவே அவன் மகிழ்வில் திழைத்தான். வனிதாவின் இதழோரம் தோன்றிய நிறைவான சிரிப்பில் அவளது கன்னத்தில் குழி விழுந்தது.

''இருங்கோ ஆனந்தன்...'' மலைத்துப் போய் நின்ற அவனை அன்புடன் வேண்டினாள். மந்திரத்தில் கட்டுண்டவன் போல அவனும் அவர்களுக்கெதிரே அமர்ந்துகொண்டான். மனதில் தேக்கி வைத்திருந்த ஆசையை எல்லாம் அவளிடம் கொட்ட வேண்டும் போலிருந்தாலும், அவனது கூச்ச சுபாவமும், அருகிலிருந்த பவித்திராவும் அவ்வெண்ணத்துக்குத் தடைபோட்டது. இப்போது வனிதா தான் ஆரம்பித்தாள். "உங்களைப் போன்ற இளைஞர்கள் வாழ்விழந்த பெண்களுக்கு வாழ்வளிக்க முன் வரவேணும் ஆனந்தன்..'' அவள் நேரடியாக விஷயத்தில் இறங்கினாள். அவன் ஒரு கணம் ஆடிப் போனாலும் அவனது மனதில் ஆயிரம் ரோஜாக்கள் மலர்ந்தன.

''நீங்கள் என்ன சொல்லுறியள்....?'' தடுமாற்றத்துடன் கேட்டான் ஆனந்தன். வனிதா விழி இமைக்காமலே அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "இவ என்னுடைய சினேகிதி பவித்திரா.... உங்களுக்குத் தெரியும் எண்டு நினைக்கிறன்....சின்ன வயசில வாழ்விழந்திட்டா... இவவுக்கு ஒரு கலியாணம் செய்து வைக்க வேணும்.... உங்களுக்குத் தெரிஞ்ச யாராவது இருந்தால் சொல்லுங்கோ....'' நேரடியாக இவனைச் சுட்டாமல், கேட்கும் அவளது தந்திரம் அவனுக்குப் புரிந்தது. முயற்சிக்கிறன்...'' என்று மென்று விழுங்கினான் ஆனந்தன். பவித்திராவின் முகம் ஓடிக்கறுத்தது. "கதைகளில் மட்டும் தான் பிரசாரம்..''

சிறிது நேரத்தில் யாரோ அழைக்கவே பவித்திரா எழுந்து செல்ல ஆனந்தனுக்கு வனிதாவுடன் தனித்து உரையாட வசதியாக இருந்தது. "நீங்கள் மற்றவையைப்பற்றி அக்கறை செலுத்துறியள். உங்களைப்பற்றி யோசிக்கவில்லையே?''

இதைக் கேட்டதும் வனிதாவின் முகம் விரக்தியுடன் சிரித்தது. "எனக்கு என்னையே தெரியேல்லை. இந்த நிலையில் நீங்கள் கேட்டதும் சிரிக்கிறதா அழுகிறதா என்று தெரியேல்லை''.

''வனிதா, இனியும் உங்கட அவர் உயிரோட இருப்பார் என்று நம்பிறியளோ? வாகீசன் இனி வருவார் என்று நான் நம்பவில்லை. எனக்கு பிடிச்சிருக்கு. என்ன சொல்லுறியள்?''

அவள் ஒரு கணம் அதிர்ந்து அவனை நோக்கினாள்.

ஆனந்தன்..... உங்களுக்கென்ன விசரே?.... நான் விதவையில்லை... பொட்டோடும், பூவோடும் தாலியோடும் தானிருக்கிறன்...''

"ஆனால் அவரில்லை. நீங்கள் உங்களையே ஏமாத்துறியள்? யோசியுங்கோ...யோசிச்சு நல்ல முடிவாகச் சொல்லுங்கோ...நான் காத்திருப்பன்....''

"நீங்க நினைக்கிறது பிழை.... அவர் உயிரோட இருக்கிறார் என்று என்னுடைய உள்மனம் சொல்லுது ஆனந்தன்...''

"ஆனால் உண்மையிலேயே இல்லை....'' அவன் இடைமறிக்கவே, அவளுக்குக் கோபம் வந்தது. கூடவே அஸ்தமிக்கும் அழகான சிதம்பரத்தை மலரைப்போல அவள முகம் சுருங்கியது.

இதற்கிடையில் ஆலய முன்றலில் பரபரப்பு பூசாரி உருக்கொள்ளத் தொடங்கிவிட்டார். பொங்கல்ப் பானைகள் இறக்கப்பட்டு விட்டன. பூசாரியின் கையில் திரிசூலம், மறுகையில் வேப்பிலைக்கட்டு, சுற்றி நின்ற கூட்டம் பூசாரியை பக்திசிரத்தையுடனும், இன்னும் சிலர் வேடிக்கையுடனும், பார்க்கக் கூடினர். திடீரென்று குரல் வளையை நெரிக்குமாப் போல ஒரு அலறல் அதைத் தொடர்ந்து உடுக்கை ஒலி பயங்கரமாக ஒலித்தது. பூசாரிக்கு உரு வந்துவிட்டது. கையிலுள்ள வேப்பிலைக்கட்டை உலுப்பியபடி உடுக்கின் தாள வலயத்திற்கேற்ப ஆட ஆரம்பித்தான். இதே சமயம் பறை மேளமும் ஆக்கிரோசமாக முழங்கத் தொடங்கியது. பூசாரி துள்ளித் துள்ளி ஆடினான்.

"ஊருக்குக் கெட்ட காலம் வரப் போகுது...ஆமியின்ர அழிவிலும் பார்க்க பெரிய அழிவுவரப் போகுது.... வைரவசாந்தி போன தடவை செய்யாதால ஊரே அழியப்போகுது..'' பூசாரி பயம் காட்டி சாமி ஆடி ஆருடம் கூறினார்.

இருளின் பின்னணியில் நிலவு முன்னைவிட இன்னும் வானில் அதிகமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மேகங்கள் சந்திரனைத் தேர் போல கட்டி இழுத்துச் சென்றன.

பூசாரி இன்னமும் ஆவேசமாகத் துள்ளி மிதந்து சாமியாட்டம் ஆடினார். அவரது பேயாட்டத்துடன் ஒரு கிழவியும், இன்னொரு நடு வயதுக்காரனும் இணைந்து கொண்டனர். உடுக்கின் ஒலி பார்த்து நிற்போர் உள்ளத்திலும் புளகாங்கிதத்தை ஏற்படுத்தியது. கால்களில் குறுகுறுப்பு.

இப்போது மீண்டும் ஒரு ஆவேசக் கூச்சல். அழகிய தேவதை போலிருந்த வனிதா கூட்டத்தின் மத்தியில் ஓடிவந்து பூசாரிக்கு இணையாக சாமியாட்டம் ஆடத் தொடங்கினாள். குலுங்கும் அவள் இளமை அழகில் இளசுகள் சொக்கிப் போயின.

வனிதாவைப்பார்க்க ஆனந்தனுக்கு ஏனோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'இவளுக்கு அமர்' என்று யாரோ ஒருவன் கிசுகிசுக்க, ஆனந்தன் அவனை முறைத்துப் பார்த்தான்.

கையிலே வேப்பிலைக் கட்டைத் தூக்கியபடி ஆவேசமாய் பூசாரியை நெருங்கிய வனிதா 'எங்கேடா என்னுடைய புருஷன்?'' என்று கேட்டு விட்டு கைகளை மேலே உயர்த்தியபடி துள்ளித் துள்ளி ஆடினாள்.

இதற்கிடையில் வைத்திலிங்கத்தார் தலைமைகிடாயை அவிழ்த்துக்கொண்டு ஆலய முன்றலுக்கு வந்தார்.

பூசாரியின் உருக்கொள்ளல் உத்வேகம் அடைந்தது. துள்ளிக்குதித்தபடி கிடாய் அருகே வந்து, வேப்பிலைக்கட்டால் அதன் தலையிலே அடித்தான். வைத்திலிங்கத்தார் கிடாய் ஓடாமல் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். வனிதாவும் ஆவேசம் கொண்டு ஆடினாள். அடங்காப் பிடாரியான அந்தக் கிடாய்கூட அவர்களின் சாமி ஆட்டத்தில் பயந்து பின்வாங்கியது. பூசாரி வதனியின் பக்கம் திரும்பி, விபூதியை எடுத்து விசிறினார்.

ஓம் துர்க்கா தேவி, காளியே மகமாயி, ஓங்காரி! ரீங்காரி! பயங்காரி! சங்கரி! ஓம் அன்னையே ஆதிபராசக்தி! வந்திடுவாய் மாரி பரிபூரணானந்த வல்லி! தேவியே சரணம் அம்மா துர்க்கா தேவி! வீரக குண வல்லி ஞானசவுந்தரியே! அம்மா அருள்புரிவாய் மருள் நீக்கி, ஆடி மழை பொழியவும், மாரி மழை பெருகவும் ஆனந்தவல்லியே அருள்புரிவாய் தாயே!

நீண்ட நாட்கள் இப்படி ஒரு பூசை செய்யாததால் சோர்வடைந்திருந்த பூசாரி, இன்று திறமை அனைத்தையும் காட்டி, ஊர் மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தார். உடுக்கையும், சங்கும், சிலம்பும் உருக்கமாய், பெரிதாய் ஒழித்தன. பூசாரியின் ஆட்டத்தில் பயந்து பவித்திராவின் குழந்தை அவளது கால்களை கட்டிக்கொண்டு வீரிட்டது.

பக்தர்கள் வைரவசாமிக்கு கிடாய் ஆடுகளையும், சேவல்களையும் கொண்டு வந்திருந்தார்கள்.

வனிதா இன்னமும் ஆட்டத்தை நிறுத்தவில்லை. காளி ஆத்தா விடட எனன வேணுமெண்ணு கேளுங்கோ. மகமாயி பதில் சொல்லுவா....

நீதான் வேணும் என்று சொல்ல நினைத்தான் ஆனந்தன். தொண்டை வரை வந்த வார்த்தைகள் அமுங்கிப் போயின. பூசாரி நீர் தெளித்ததும, வைத்திலிங்கத்தார் கிடாயை இழுத்துக்கொண்டு போனார். சிறுவர்க ளும் கூடப் போனார்கள்.

வடதிசையில் வேட்டுக் கள் தீர்க்கப்படுவதும், ஐயோ என்று அலறுவதும் கேட்கவே பக்தர்கள் எல்லோரும் மிரண்டு ஓடினர். ஆடிக்கொண்டிருந்த வனிதாவும் சாமியாட்டத்தை நிறுத்தி விட்டு ஓடினாள்.

வனிதாவின் பின்னால் ஓடிய ஆனந்தன் அவளருகே சென்றதும், அவளது கைகளைப் பற்றியபடி ஓடினான். அவனோடு இணைந்தபடி அவளும் ஓடிக்கொண்டிருந்தாள். எதுவித மறுப்புமின்றி. ●

---

## மாத்திரைக் கதை

### இடம்



கழுதையும் பட்டாம் பூச்சியும் உலாப் போயின.

மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன.

'இந்த இடத்தில் நான் இசைக் கச்சேரி வைப்பேன். இங்கே எனக்கு வரவேற்பிருக்கும்...' என்றது கழுதை.

அது பாடத் தொடங்கியது.

என்ன கொடுமை... கழுதைக் கச்சேரி - கல்வீச்சு கலாட்டா என்று ஆகியது.

அடிபட்ட கழுதையும், பட்டாம்பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்துகிடந்த ஒரு குச்சி வேலியின் அருகில் வந்து சேர்ந்தன.

கழுதைக்கு ஒரே கொண்டாட்டம்.

ஓணான்கள் வரிசையாக அங்கே வேலியில் உட்கார்ந்து தலையை ஆட்டிக்கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத் தொடங்கியது.

என்ன ஆச்சரியம்! தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

வியப்போடு அசைவற்றுநின்ற பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு ஒன்றும் வியப்படையாதே... இங்கே அப்படித்தான் என்று கூறியது.

சுருக்கமாக அது சொன்னது :-

'ஓணான்களின் ஊரில கழுதைகள் வித்வான்களே'

- கவிஞர் காசி ஆனந்தன்

# நூல் உலகம்




நூலின் பெயர்: சுயம்வரம்

எழுதியவர்: கே.எஸ்.துரை

## விடுதலைப் போராட்டத்தின் பால் அக்கறையை வெளிப்படுத்தும் நாவல்

கி.செ.துரை என்ற படைப்பாளி புலம் பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்ந்து வருகிறார். இவரின் சுயம்வரம் (1993), ஒரு பூ (1995) ஆகிய இரண்டு நாவல்களும், அடிவானத்திலிருந்து (1998) சிறுகதைத் தொகுதியும், புதிய சிந்தனைக் கட்டுரைகள் (1999) என்ற தொகுப்புமாக இதுவரை நான்கு நூல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட கி.செ.துரை, டென்மார்க்கில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரின் 'சுயம்வரம்' என்ற நாவல் மீதான குறிப்பாகவே இந்தக் கட்டுரை அமைகிறது.

இலங்கைப் பேரினவாத அரசு தமிழர் மீது மேற்கொண்ட ஒடுக்கு முறைகளின் போது, அதனை எதிர்கொண்ட மக்கள் போராளிகளுடன் இணைந்து கடற் படைக்கலத்தை அழிக்கும் சம்பவத்தை ஒரு கடற்கிராமத்தின் பின்னணியில் கூறுகின்ற கதையே சுயம்வரம்.

டென்மார்க், வடமராட்சி ஆகிய இரட்டைச் சூழலின் பின்புலத்தில் கதைக்களம் விரிகிறது. பிரச்சினைகளின் போது புலம்பெயர்ந்து சென்ற ஜீவாவின் நினைவினூடாகவும், வெளிப்பாடுகளினூடாகவும், அவளின் பேரன் மயிலர் என்ற முதிய வருக்கூடாகவும் கதை நகர்கிறது.

1987 இல் வடமராட்சிப் பிரதேசத்தில் இலங்கை அரச இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பரேசன் - லிபரேசன் நடவடிக்கையின் போது அதிகமான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டதும், கடற்படையாலும், கடற்படைத் தாக்குதல்களாலும் மக்கள் எதிர்கொண்ட துயரங்களும், அதன் பின்னர் அப்படைக் கலத்தைப் போராளிகள் தாக்கி அழிப்பதும் கதையின் பிரதான சம்பவங்களாக அமைகின்றன.

போராட்ட உணர்வுகளால் உந்தப் பட்ட ஜீவா, பெற்றோரின் நிர்ப்பந்தத்தின் காரணமாக டென்மார்க் புலம் பெயர நேர்கிறது. அங்கு சோபியா என்ற பெண் கொள்ளும் காதலை நிராகரித்து, தனக்காக ஊரிலிருக்கும் செங்கமலத்தை திருமணம் செய்யவிருப்பதாகவும் உண்மையைத் தெரியப்படுத்துகிறான். எனினும் -

'தமிழீழப் போர் தனக்கும், செங்கமலத்துக்கும் நடைபெறவிருக்கும் திருமணத்துக்கான ஒரு சுயம் வரமென்றால், அந்தச் சுயம்வரத்தை முதலில் எதிர்கொள்ள வேண்டியது முறைப்படி ஒரு ஆண்மகனுக்கே கடமையாகிறது என்று அவனது அறிவுக்குப்பட்டது.'

இதனால் ஜீவா தாயகத்துக்குத் திரும்புகிறான். தாயகத்திலோ மயிலர் தன்னைச் சூழ பல இழப்புக் களைச் சந்திக்கிறார். ஜீவாவின் பெற்றோர் வெட்டிக் கொல்லப்பட்டது, வள்ளிக் கொடி செல்வீச்சில் கால் இழந்தது, வீச்சுகார சிவலிங்கத்தின் இழப்பு, காலங் காலமாகச் செய்துவந்த தொழிலின் இழப்பு எல்லாம் மயிலரை பலவாறு சிந்திக்க வைத்தபோது -

'எங்கட உயிரோட விளையாடுற உந்தப் பிலாலை நான் பிறந்து வளர்ந்த இந்தக் காட்டுவளவுக் கடற் கரையில் வைத்தே பிரட்டவேணும். அந்தக் காட்சியைக் கண்ணால பார்க்காமல் சாகமாட்டன்.'

என சபதங்கொள்கிறார். நாவலில் ஜீவா, மயிலர் ஆகிய இரண்டு பாத்திரங்களும் ஓரளவும் முழுமை பெற்ற பாத்திரங்கள். தன்னால் முடிந்த பணியை ஆற்றும் செங்கமலம், டெனிஸ் கலாசாரத்தில் வாழ்ந்தாலும், உண்மையைப் புரிந்துகொண்டு நட்புக்கொள்ளும் சோபியா, ஜீவாவின் எண்ணங்களைக் கிளறி, மனந்திறந்து கதைக்கும் இயரிக் ஜென்சன், தங்கைகளின் வாழ்வுக்காகத் தன்னை இழந்துகொண்டிருக்கும் வைகுந்தன், மற்றும் வள்ளிக்கொடி, வீச்சுக்கார சிவலிங்கம் ஆகிய பாத்திரங்கள் அடுத்து முக்கியம் பெறுகின்றன.

வடமராட்சியின் கிராமியப் பண்பு வெளிப்படும் வகையில் அமைந்த இந்நாவலில் வல்வெட்டித்துறை கடற் கிராமத்தின் பாரம்பரியப் பெருமைகளும், கிராம மக்களின் வாழ்வும், தொழில்முறை அனுபவங்களும், பேச்சுவழக்கும் நன்கு பதிவாகியுள்ளன. இந்நாவலின் நடைச்சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

"பாதி வாழ்க்கையை முடித்துக் கொண்டுவிட்ட பட்டணச் சுருட்டொன்று மயிலரின் வாயில் மெல்லியதாக புகைந்துகொண்டிருந்தது. சித்திரை மாதக் கடைசியில் ஏற்படும் கச்சான் காற்றுக் குழப்பம் வந்துவிட்டாலே போதும் மயிலருக்கு விளைமீன் மோப்பம் நாசில் தட்டிவிடும்."

"பிரித்து வைக்கப்பட்டிருந்த கடதாசிச் சரையில் பன்னிரெண்டாம் நம்பர் தூண்டில்கள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. தங்கூசியை நன்றாக இழுத்து, விரலிடுக்குகளால் நீவி பக்குவமாகத் தூண்டில்களில் பெருக்கிக் கொண்டிருந்தார் கிழவர். தொழிலின் அனுபவமும், பொறுமையும் அவர்போடும் முடிச்சுக்களின் இறுக்கத்தில் பரிமளிக்கும். ஆகையால்தான் தூண்டில் போடும் திட்டத்திற்கு அரிப்புக்கட்டி, ஈயக் குண்டு போடுவதில் அந்த வட்டாரத்தில் மயிலருக்கு தனிப்பெயருண்டு."

"கள்ளை பிளாமுட்ட நிரப்பி, தும்புக் கட்டை மீசையை இரண்டு பக்கமும் ஒதுக்கி, சுட்டபழம் ஊதுவதுபோல கள்ளின் மேல் ஒரு ஊது ஊதி, அதன் தரத்தை நாசியால் மோப்பம் பிடித்து, பூனைபோல கண்களை மூடியபடியே இழுக்கத் தொடங்கினார் மயிலர். ஒரு மிடறு இழுத்து வாயை மொச்சுக்கொட்டிய போது, 'ஏனண்ணை செத்தவீட்டை போகேல்லையோ' என்று இடைமறித்தார் தாவீதார். பிரதேச மொழிச் சொற்களான அதகுவிலை, அதகுவட்டி, ஒறுப்பு, ஆண்டம்பாளித்த, மீன்பாடு, கறுப்புத் தள்ளுவது, நிலாக்காலித்தல் ஆகியன உரையாடலுக்கு சிறப்பாயுள்ளன. அதே நேரம் ஜோராக, பைசிக்கிள், மாமூல், காட்டுத்தர்பார், வாபஸ், சமிக்ஞை ஆகிய சொற்களின் பிரயோகம், ஈழத்தமிழர் பேச்சு வழக்கு எழுத்து வழக்கில் மிகக் குறைவு. இவை கதையில் வரும்போது ஒருவித செயற்கைத்தன்மையை ஏற்படுத்தி விடுகிறது.

இந்நாவலுக்கூடாக ஆசிரியர் உதிரியாக சில செய்திகளையும் முன்வைக்கிறார். டெனிஷ் சமூகத்தின் வாழ்க்கை முறை, புலம்பெயர் தமிழ் இளைஞர்கள் தம் சகோதரிகளுக்காக ஓடாகத் தேய்ந்து சீதனத்திற்காக அனுப்பும் பணம், அந்நிய கலாசார சூழலில் தமிழரின் பண்பாட்டுப் பெறுமானம், போராளிகளின் செயற்பாடுகள் ஆகியன. இந்நாவலுக்கூடாக கதை சொல்லவதை மட்டும் முக்கியப் படுத்தாமல் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாலான அக்கறையையும், அதற்கூடாக தான் பிறந்து வளர்ந்த மண்ணின் உயிர்த்துடிப்பான வாழ்வையும் பதிவு செய்திருக்கிறார்.

இந்த வகையில் புலம்பெயர்ந்த தேசத்திலிருந்து வெளிவந்த படைப்புகளில் விடுதலைப் போராட்டத்தின் பாலான அக்கறையை வெளிப்படுத்துவதிலும், வடமராட்சிப் பிரதேசப் பண்பு வெளிப்படும் வகையில் கதை கூறுவதிலும், ஈழத்தமிழரின் புலம்பெயர் இலக்கியப் படைபுலகில் கணிப்பிற்குரியதாக சுயம்வரம் நாவல் திகழ்கின்றது எனலாம்.

**துவாரகன்.**

## மனித வாழ்வும் நாகரிகமும் கலைகள் இன்றி உருவாக முடியாது

தனிமனிதர்க்கு கனவுகள் எப்படியோ அப்படி ஒரு சமுதாயத்துக்குக் கலை என்பது கட்டுப்பாடுகள் அற்ற யாருக்கும் சொந்தமில்லாத ஒரு தனி உலகில் நாங்கள் சுதந்திரமாக பவனிவரக் கனவுகள் வாய்ப்பளிக்கின்றன. உலகின் களேபர சந்தடி உளைச்சல் எனும் பனி மூட்டம் எம் மனத்தை விட்டகல கனவுகள் காரணமாகின்றன. எமது எண்ணங்களினின்றும் எம்மை விடுவித்துக் கொண்டு நாங்கள் கூர்ந்து கவனிப்போமானால் எங்களை நாங்களே அறிந்து கொள்ள அவை உதவுகின்றன.



அடக்கி ஒடுக்க முடியாத எமது உட்குரலை நாங்கள் கேட்க முடியும். எமது அன்றாட வாழ்வின் வாஸ்தவங்கள். அவற்றின் படிமங்களை எமது கருத்தில் கலந்திருக்கச் செய்கின்றன. காலம்காலமாக கனவுகளை ஆராய்ந்து அவற்றின் பொருளை உணர எத்தனங்கள் செய்யப்படுகின்றன. கண்ணுக்குத் தெரியாத எம்மைச் சூழ்ந்திருக்கும் உண்மையைப் புரிந்துகொள்ள கால, இட எல்லைகளால் நேரும் சம்பிரதாயங்களை வெற்றி கொள்ள, சென்று போனதை அறிந்து கொண்டு, இனி வரப்போவதை உய்த்தறிந்து, அதன் மூலம் நிகழ்காலத்தை கொஞ்சமேனும் அறிந்து கொள்ள மனிதன் கனவுகளை ஆய்ந்திருக்கிறான். எமக்கு மட்டும் கனவு காணும் உரிமை மறுக்கப்படுமானால், சிந்தனைக்கு உட்படா சிந்தனையால், வார்த்தைகளற்ற வார்த்தைகளால் ஒட்டப்படாது மூச்சடைந்து நாம் மாண்டு போவோம்.

கனவுகள் ஒரு தனி மனித ஆன்மாவின் வெளிப்பாடாயின், கலை மனித குலத்தின் ஆன்மாவின் வெளிப்பாடு எனலாம். இதர விலங்கினங்களுக்குக் கூட கனவுகள் உண்டு என்று நம்பப்படுகிறது. எனினும் மனிதன் மட்டுமே கலை ஆற்றல் பெற்றவனாயிருக்கிறான்.

மனித வாழ்வும், நாகரிகமும் கலைகள் இன்றி உருவாக இயலாது. புதைபொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்து காட்டியிருக்கும் இடிபாடுகள் பழைய, புதிய கற்காலங்களின் வாழ்வு பற்றி ஓரளவு அறிந்து கொள்ள உதவுகின்றன. எமது முன்னோர்கள் வாழ்ந்த விதம், பூமியின் மேற்பரப்பில் ஓரளவு காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் சமய சமயங்களில் எமது தொலை தூர நினைவு ஒன்றிலிருந்து எமது பிரபஞ்சத்தை நோக்கிப் பாய்ந்து வரும் அம்பைப்போல், கால அடிவயிற்றின் ஆழத்திலிருந்து செய்திகள் எம்மை நாடிவருகின்றன.

இந்தச் செய்திகள் குகைச்சுவர் ஓவியங்களாய், கல்வெட்டுக்களாய், களிமண் வடிவங்களாய், மரத்தின் பால் செதுக்கல்களாய் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டு, எமக்குக் கிடைத்திருக்கின்றன. ஓர் எழில்மிக்க இசைக் கருவியின் வடிவத்திலோ, அழிவற்ற கதைகளாகவோ, உலகம் பரவிய இதிகாசங்களாகவோ, அறிவு புகட்டும் நாட்டுப்புறக் கதைகளாகவோ அவை எமக்குக் கிடைத்திருக்கலாம். மன்னர் தம் பொக்கிஷங்கள், வெற்றிப் பரிசங்கள், கோட்டைகள், கொத்தளங்கள் இவை எல்லாம் பிடி சாம்பலாகிய நிலையில் கலையாகிவிட்ட கவின் பொருள் காலங்கடந்து வாழ்வதைப் பார்க்கிறோம். உலகைப் பாதிக்கிருக்கும் தலைகீழ் மாறுதல்கள், பல வீரத் தலைமுறையினரின் வாடிக்கையான அழிவு, பூமியின் தட்ப வெப்ப குறிப்புகள், சமுதாயப் புறக்கணிப்பின் விளைவுகள் இவற்றையெல்லாம் தாண்டி ஓர் உன்னத கலாசிருஷ்டி, எவ்வித விக்கினமும் இல்லாத எம்மை நாடிச் சேர்கிறது. கடந்த காலத்தின் வெகுமதியாக விளங்குகிறது. மனித குலத்தின் நீண்ட சரித்திரத்தினூடே நம்மைப் பற்றியும் எமது நெடும் பயணம் பற்றியும் இந்தச் செய்திகள் எமக்குக் கூறுகின்றன. எமது அச்சங்கள், போராட்டங்கள், நம்பிக்கைகள், எமது வழிபாடு மூர்த்தங்கள், கலைகள் கண்ட விற்பன்னர்களின் வாழ்க்கைத் தடயங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக இவை விளங்குகின்றன.

எம்மைப் பற்றியும் மாச்சரியங்களையும், தொலைதூர இடைவெளித்தடங்கல்களையும், மீறிய செய்திகளையும் ஒரு துல்லியமான மொழியில் பேசும் நிரந்தர வாழ்வுக்கான எமது பிரமை, அதிகாரம், பேராசை இவை யாவற்றையும் பிரதிபலிக்கக்கூடிய அனைத்தும் எமக்கு மறந்து போயிருக்கும். அந்தக் கலைப்பொருட்கள் நாம் இங்கே வாழ்ந்திருந்தோம் என்பதற்கும், இந்த வாழ்க்கையின் குறுகிய விளம்பிற்கு அப்பால் எமது இலட்சிய நாட்டத்திற்கும் சான்று பகர்ந்து நிற்கும்.

ஒரு கணம் நினைத்துப் பார்ப்போம். பிரபஞ்ச வெளியில் நாம் எழுப்பிய அந்த நினைவுச் சின்னங்கள் உள்ளடக்கி, இருக்கக்கூடிய செல்வங்கள் எவையாக இருக்கக்கூடும். வளரும் நமது நாகரிகத்தின் கனவுகளை உள்ளடக்கிக் காத்து நிற்கக்கூடிய அகண்ட பல்திறச் செறிவு மிக்க கருவறையாக அவை விளங்குகின்றன. முழுமையற்ற, உன்னதமான நாம் படைத்த கலைப் பொருட்களின் ஒருங்கிணைந்த தொகுதியாக அங்கே அனைத்தும் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நெஃபர்டிடியின் வாய் புராதன எகிப்தின் பெருமை பேசும். மைக்கலேஞ் சலோவின் டேவிட், பாட்டி செல்லியின் வசந்தம், கலை இலக்கிய மறுமலர்ச்சிக்காலத்தின் பிரதிபலிப்பாய் விளங்கும். பிக்காசோவின் குவர்நிக்கா 20 ஆம் நூற்றாண்டின் வன்முறையை திரஸ்கரிக்கும். சென்ற காலத்தின் சில கர்ப்பிணிப்பெண்களின் பிரதிமைகள் என்றோ நிகழ்ந்த இறைவன் திருஷ்டித்த ஈடன் தோட்டத்தின் ஓர் எழில்மிகு தேவதை ஆண்டிருந்த காலத்தை உணர்த்தி நிற்கும்.

- இசபல் அலின்டே.

## அந்திக்காச் சின்னம்

அந்த
ஆழ்ந்த அகழிகளை
சாம்பல் கொண்டு
தூறுங்கள்.

மேடும் பள்ளமுமாய்
இருக்கும்
பூமித் தரைகளை
மெள்ள
தட்டந்தட்டி
வெண்மையானதாய் – ஓர்
நடைபாதை போடுங்கள்

இடையிடை
புல்லை ...
மரங்களை...
வெண்பூச் செடிகளை...
இன்னும்
அவை விரும்பும்
எல்லாவற்றுடனும்
ஓர்
ஒலிவ் மரக் கிளையையும்
கொண்டு வந்து நடுங்கள்!

வெளியூர் வெண்புறாக்கள்
இது ஓர்
இனத்தின்
விடுதலைக் குரல்வளையை
நசுக்கிப் போட்ட
கொலைக் களம்
என்று அறியாதபடி!

வளலாய் செல்வகுமார்

## சாத்தான்கள்



அந்தியிருள் சாய்ந்து
விடியல்
நெருங்கும் வேளை
வீதியில்
இரு சேவல்கள்
கூவிக் கொண்டன.

அருகில்
அந்தகார இருளுக்குள்
மறைந்திருந்த – இரு
மர நாய்கள்
தமக்குள்
பேசிக்கொண்டன....
விடியலை வரவேற்கும்
சேவல்கள் பற்றி....
மெல்ல மெல்ல
இருளும் விலகி
விடியல் நெருங்கும்
சகுனம்....
வீதிச் சேவல்கள்
மேல்
மர நாய்களிரண்டும்
பாய்ந்து குதறின!

விடிந்தால் எமக்கு
வெளிச்சமில்லை!

# 'அஸ்பெஸ்ரஸ்' பாவனையைத் தடுப்போம் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள்!

கிளிநொச்சி—

கன்னாரிழை (அஸ்பெஸ்ரஸ்) பாவனையைத் தடுப்போம் - பாவனையில் உள்ளவற்றைப் படிப்படியாக அகற்றுவோம் என்று தமிழீழ சுகாதார சேவையினர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் விடுத்துள்ள வேண்டுகோளில் -

கன்னாரிழை பயன்படுத்துவதன் மூலம், ஒருவித சுவாசத் தொற்று நோய் ஏற்படுவதாக 1800களில் உணரப்பட்டது. ஆனால் 1906 ஆம் ஆண்டளவில் தான் இங்கிலாந்தில் இந்தத் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளிலும் இதன் தாக்கம் உணரப்பட்டுள்ளது. இதன்பின்னர், பாவனை குறைக்கப்பட்ட போதும், 1980 ஆம் ஆண்டுகளில் - அமெரிக்காவில் வருடம் ஒன்றுக்கு இதன் தாக்கத்தால் நோயுற்று மரணம் அடைந்தவர்கள் பத்தாயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர்தான் அமெரிக்காவிலும், ஏனைய நாடுகளிலும் கன்னாரிழை தடைசெய்யப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் எமது பிரதேசங்களில் இதன் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் 10,20 வருடங்களின் பின்னர் உணரக்கூடியதாக இருக்கும். அதாவது, மாற்றமுடியாத சுவாச தொற்றுநோய்க்கு உள்ளாகி எமது மக்கள் இறக்க நேரிடும்.

எனவே, இதனை நாம் கருத்தில் கொண்டு இன்றே கன்னாரிழைப் பாவனையைத் தடுக்க முன்வருவோம். முன்னர் பாவனையிலுள்ளவற்றை படிப்படியாக அகற்றுவோம். அவற்றுக்கான மாற்று முறைகளை செயற்படுத்துவோம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'இத்தா' நோன்பிருந்த முஸ்லிம் பெண்ணை காவலில் வைத்தமைக்கு நீதிவான் கண்டனம்

மன்னார்—

மன்னாரில் 'இத்தா' நோன்பு கடைப்பிடித்துவந்த கணவனை இழந்த முஸ்லிம் பெண்ணைத் தடுப்புக் காவலில் வைத்திருந்ததற்கு மன்னார் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரித்தது.

மன்னாரைச் சேர்ந்த ரமேஸ் ராஜா (வயது 42) கடந்த மாதம் ஓகஸ்ட் 21 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடுமையான தாக்குதலுக்குள்ளானார். மன்னாரில் அவருக்குச் சொந்தமான திரையரங்கு அருகில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி ஓகஸ்ட் 28 ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்த நிலையில் இந்தக் கொலை தொடர்பான நீதிமன்ற விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ரமேஸ் ராஜாவின் மனைவி உள்ளிட்டோர் மன்னார் நீதிமன்றில் அன்றையதினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த விசாரணையின் போது தனது கணவர் இறந்ததையடுத்து முஸ்லிம் மத வழக்கப்படி இத்தா நோன்பிருந்து வரும் ரமேஸ் ராஜாவின் மனைவியை மன்னார் பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்திருப்பது குறித்து நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாவிடம் முறையிடப்பட்டது.

மன்னார் பொலிஸாரின் இந்தச் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதி அப்துல்லா, அந்தப் பெண்ணை உடனே விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

அடுத்த கட்ட விசாரணையை நவம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அடுத்த விசாரணையின் போது நீதிமன்றுக்கு வரவேண்டும் என்றும் அந்தப் பெண்ணுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# சுகாதாரக் கண்காட்சி நேற்றும் நடைபெற்றது

கிளிநொச்சி—

கிளிநொச்சி சுகாதார பணிமனை நடத்தும் சுகாதாரக் கண்காட்சி, கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 9.00 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

முதன்மைக் கண்காட்சி மண்டபத்தை - முன்னாள் கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.



இந்தக் கண்காட்சியில் போஷாக்கு குறைபாட்டில் ஏற்படும் நோய்கள் குறித்தும் - கற்பவதிகள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு போஷாக்கு அளிக்கும் உணவாக - சோளம், சோயா ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. காசநோய் விபத்துகள் மற்றும் தற்கொலைகள் குறித்த விடயங்களும் காட்சிப்படுத்தப்படிருந்தது. அத்துடன், தெருநாய்களால் ஏற்படும் அபாயம் - அதனால் ஏற்படும் நீர்வெறுப்பு நோய் குறித்தும் அங்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்தக் கண்காட்சி நேற்றும் காலை 9 மணிமுதல், மாலை 5.30 மணிவரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கனகராயன் குளம் வீதிவிபத்தில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்தனர்

கிளிநொச்சி—

ஏ-9 நெடுஞ்சாலையின் கனகராயன் குளப் பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.10 மணியளவில் கனகராயன் குளப்பகுதியில் பெரியகுளம் பாடசாலை முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கியே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

கனகராயன் குளப்பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த இரு சிறுவர்கள் மீது வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் வேகமாக மோதியதால் பெரியகுளம், கனகராயன் குளத்தைச் சேர்ந்த 12 வயதையுடைய செல்வராசா செல்வகுமார் எனும் சிறுவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் படுகாயமடைந்த 14 வயதுடைய பிறேம்குமார் நிரஞ்சன் என்பவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துவந்த சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவற்துறையினர் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று தகவல்களைப் பெற்றுள்ளதோடு, விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை உயிரிழந்த இரு சிறுவர்களின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுவர், முதியோர் தின விழா

ஆழியவளை—

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பிற்பகல் 2 மணிக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதனும், கௌரவ விருந்தினர்களாக - வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.தியாகராசா, கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலை வர் மு.தங்கவேல், பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத் தலைவர் ந.யோக ராசா, அபிவிருத்திப் புனர்வாழ்வுத் தலைவர் சி.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், இந்த நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன், பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (122)

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர் - 10**

1800: ஆங்கிலேயர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டில் புரட்சியாளர்களுக்கு - உணவுப்பொருட்களோ, பிற பொருட்களோ கிடைக்கக்கூடாது என்பதற்காக சில பிரதான நகரங்களில் உள்ள அனைத்துக் கடைகளையும் மூடிவிடும்படியும், தடையை மீறுவோர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் எனவும் அறிவித்தனர்.

1846: வில்லியம் லாஸ்ஸெல் என்பவரால் நெப்டியூன் கிரகத்தின் நிலவான டிரைட்டன் கண்டுபிடிக்கப்பட்டது.

1872: ரஷ்யாவிடமிருந்து அலாஸ்கா பிரதேசத்தை அமெரிக்காவுக்கு வாங்கிக் கொடுத்த வில்லியம் ஹென்றி ஸீவார்ட் நியூயோர்க்கில் காலமானார்.

1896: இந்தியாவின் ராஜஸ்தானில் ஜோத்பூர் என்ற இடத்தில் வானியல் ஆய்வு மையம் திறக்கப்பட்டது.

1911: குண்டுவெடிப்பு நிகழ்வு ஒன்றைத் தொடர்ந்து சீனப் புரட்சி ஆரம்பமானது.

1913: பானாமா கால்வாயின் கியூல்பராகட் பகுதி தோண்டி முடிக்கப்பட்டது. இறுதிப்பகுதி டைனமற் வெடி மூலம் வெடிக்கச் செய்து, தகர்க்கப்பட்டபோது, அந்திலாந்திக் மாகடல் தண்ணீரும், பசுபிக் மாகடல் தண்ணீரும் சீறிப் பாய்ந்து மோதி மேலெழுந்தன.

1918: முதல் உலகப் போர்க் காலங்களில் பயணிகள் கப்பல்களைத் தாக்குவதைத் தமது நீர்மூழ்கிக் கப்பல்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று ஜேர்மனி அரசு உத்தரவிட்டது.

1933: லத்தீன் - அமெரிக்க நாடுகள் தமக்கிடையே ஒருவருக்கொருவர் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்று உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன.

1960: பங்களாதேசில் அடித்த சூறாவளி காரணமாக பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

1960: சோவியத் ரஷ்யா செவ்வாய்க்கிரகம் பற்றி ஆய்வு செய்வதற்காக 1960 A என்னும் செயற்கைக்கோளை அனுப்பியது. இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

1961: தென் அத்திலாந்திக்கிலுள்ள தீவான டிறிஸ்டான் டாகுன்ஹா என்ற பகுதியில் இருந்த எரிமலை ஒன்று மீண்டும் சீறிப்பாய ஆரம்பித்தது.

1962: 1961.04.17ஆம் திகதி அமெரிக்காவின் C.I.A. யினால் குவாட்டமாலாவில் வைத்து பயிற்சியளிக்கப்பட்டு கியூபாவின் பிக்ஸ் குடாவில் தரையிறக்கப்பட்ட 1400 பேர்கள் அடங்கிய படையணியினைச் சுற்றி வைத்த பிடல் காஸ்ரோவினது படைகள் உயிரோடு கைது செய்த 1113 படையினரை காஷ்ட்ரோ கோரிய ஆறுகோடி டொலர்களைக் கொடுத்து அமெரிக்கா மீட்டது.

1963: அல்ஜீரியாவுக்கும் - மொரோக்கோவுக்கும் இடையே எல்லைத் தகராறு மூண்டது.

1964: 18ஆவது ஒலிம்பிக் போட்டிகள் டோக்கியோவில் ஆரம்பமாகின. 93 நாடுகளைச் சேர்ந்த - 4457 வீரர்கள், 683 வீராங்கனைகள் என மொத்தம் 5140 வீரர்கள் கலந்து கொண்டனர்.

1969: மகாத்மா காந்தியும், அன்னை கஸ்தூரிபாயும் சேர்ந்த தான தபால் தலை இந்தியாவில் வெளியிடப்பட்டது. தம்பதிகளாக இணைந்து தபால் தலை வெளியிடுவது இதுவே முதற் தடவையாகும்.

1970: பிஜிதீவு கொமன்வெல்த் அமைப்பிற்கு உட்பட்டு சுதந்திரமடைந்தது.

1973: வருமானவரி ஏய்ப்பிற்காக, அமெரிக்க உப ஜனாதிபதியான ஸ்பைரோ அக்னியூவுக்கு 10,000 டொலர்கள் அபராதமும், மூன்று வருட நன்னடத்தைப் பிணையும் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் பதவி விலகினார்.

1980: அல்ஜீரியாவில் அல் அஸ்னாம் என்னும் நகரில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் 6000 பேர் இறந்து போயினர். 250,000 இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன. நகரில் 80 வீதமான கட்டடங்கள் தரைமட்டமாகின.

1994: ஈராக் எல்லையிலிருந்து தனது படைகளை ஈரான் மீளப் பெறத் தொடங்கியது.

1996: உகண்டாவின் தலைசிறந்த விடுதிப் பாடசாலையான சாந்தமேரி பாடசாலையைத் தாக்கிய கிளர்ச்சிவாதிகள் 139 மாணவிகளைக் கடத்திச் சென்றனர்.

2000: இலங்கையில் 11ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது.

2001: இன்று நள்ளிரவுடன் இலங்கையின் 11ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

தொகுப்பு- சந்துரு

# வன்னியிலிருந்து கால்நடைகளை கொண்டு செல்ல தற்காலிகத் தடை

கிளிநொச்சி—

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் இருந்து கால்நடைகளை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

வன்னிப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாலும், குறிப்பாக அனைத்து இன காளை மாடுகளினதும் எண்ணிக்கை வெகுவாக அரிதாகி வருவதாலும், கால் நடைகளை இனப்பெருக்கம் செய்ய வேண்டியுள்ளதால் - இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

ஆற்றல் அனைவரிடமும் இருக்கிறது. அந்த ஆற்றலை புதிய, தெரியாத இடங்களில் செலுத்தும் மனோதைரியம் பலரிடம் இல்லை.
-எரிகா ஜாங்-

## நமது நோக்கு

### தேசிய அரசு அமைக்கப்பட்டாலும் கூட, அது சிங்கள தேசிய அரசாகவே அமையும்!

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெறுவாரேயானால், அவர் தற்போதைய ஜனாதிபதியும் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான உடன்பாடு ஒன்று இருவருக்குமிடையே எட்டப்பட்டுள்ளதாகவும், எனினும் இந்த உடன்பாடு குறித்த விபரங்கள் வெளியிடப்படாது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகவும், உரிய சாதகமான சூழல் வரும்போது பகிரங்கப்படுத்தப்படுமெனவும் தென்னிலங்கையின் அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுவதாகக் தெரியவந்துள்ளது.

இந்தச் செய்தி உண்மையாகவும் இருக்கலாம், ஊகத்தின் அடிப்படையிலானதாகவும் இருக்கலாம். ஆனாலும், இந்தச் செய்திக்குள் உள்ளடங்கியதாக வேறு சில செய்திகளும் இருக்கவே செய்கின்றன. உண்மையில் இந்த உள்ளார்ந்த செய்திகளின் ஆதார மூலங்கள் இன்றைய தென்னிலங்கையின் அரசியல் யதார்த்த நிலையின் அடிப்படையிலான ஆய்வுகளின் வெளிப்பாடாகவே உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவானது, இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரையில் விரும்பத்தகாத, ஆனால் தவிர்க்க முடியாத நிகழ்வாக அமைந்து விட்டது என்பதே உண்மையாகும்.

அவரது அந்தத் தெரிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று என அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, கட்சியின் சிரேஷ்ட- அதி சிரேஷ்ட தலைவர்கள் பலரும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அரசியல் அறிந்தோர் அறிவர்.

இந்தத் தெரிவு தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டு விரிசல் நிலை வெளியே தெரிய வந்தால் அது கட்சியின் பலவீனத்தை அம்பலமாக்கிவிடுமென்பதால் கட்சியின் மேல்மட்டத்தினர் மௌனம் காக்கிறார்கள்.

நாட்டின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்வுசெய்வதற்கான தேர்தலுக்கான முன்னோடி முக்கிய நகர்வுகள் மேற்கொள்ளப்படும்போது, ஜனாதிபதி நாட்டில் இருக்காதபோது, அவரின் வருகைக்காகவோ, ஆலோசனைக்காகவோ பிரதமர் காத்திருக்காது- ஜனாதிபதியுடன் முரண்பட்ட கொள்கைகளைக் கொண்டவர்களான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் தேர்தல் ஆதரவு உடன்பாடுகளை மேற்கொண்டபோதே - அந்தச் செய்தி மேலும் பல செய்திகளை மக்களுக்கு சொல்லாமல் சொல்லிவிட்டது.

ஜனாதிபதி - இனிமேலும் ஜனாதிபதியாக அதிகாரம் செலுத்தும் காலம் அஸ்தமிக்க தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட பிரதமர் மகிந்த- தனது இலக்கினை எட்டத் தேவையான நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்ததுடன், ஜனாதிபதியையும் அவரது பேச்சுக்களையும் அலட்சியம் செய்து ஒதுக்கத் தொடங்கினார். இதனை அவர் மறுத்து நிராகரித்தாலும் உண்மை உண்மைதான்.

தேர்தலுக்கு முன்னரே தன்னை இப்படி ஒதுக்கி, தன்னை அவமதித்தோருடன் ஒன்றி, அவர்களின் பாட்டுக்கெல்லாம் 'ஆமாம் போடும்' ஒருவராக மாறிவிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ - ஜனாதிபதியானால் நிலை என்னவாகும் என்ற கேள்வி ஜனாதிபதியை மட்டுமல்ல, பண்டாரநாயக்க பரம்பரையையே அச்சமூட்டும் ஒன்றாகவே உள்ளது.

பண்டாரநாயக்க பரம்பரையில் முடிக்குரிய இளவரசராக தன்னைக் கற்பிதம் செய்துவந்த அனுராவுக்கும் முகவரி இழக்கும் அவலம் உள்ளதால், சந்திரிகா சில மாற்று வியூகங்களை அமைப்பதில் கடந்த சில வாரங்கள் தீவிரம் காட்டியதாகக் கூறப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைக்கால சந்திப்பும் அத்தகைய வியூகங்களுள் ஒன்றை அமைப்பதற்கான முன்னோடி நிகழ்வாகவும் இருந்திருக்கலாம்.

எப்படியோ இன்றைய ஜனாதிபதித் தேர்தல் களத்தில் -

ரணிலுக்கு மகிந்தர் நேர் எதிர் நிற்கும் போட்டியாளர் அல்லது எதிரி.

சந்திரிகாவுக்கு அருகேயே, அவரது கதிரையை தனக்கான தாக்கிக்கொண்டு அவரை அதிலிருந்து அகற்ற வியூகமமைத்து வரும் எதிரி.

ஆகவே, மகிந்தர் - ரணிலுக்கும், ஜனாதிபதிக்கும் பொது எதிரியாக இப்போது அடையாளப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பொது எதிரிக்கு எதிராக இந்த இரு எதிரணித் தலைவர்களும் ஒன்றிணைதல் என்பது சாத்தியமற்ற விடயம் என எவராலும் கூறிவிடமுடியாது.

எனவே, தேசிய அரசு அமைக்கும் திட்டத்தையும் உடனடியாக நிராகரிக்கவும் முடியாது.

மகிந்தர் ஜனாதிபதியானால் அவரின் பின்னால் நின்று அவரை ஆட்டிப்படைக்கும் சக்தியாக ஜே.வி.பியினர் இருப்பார்களேயானால் அது ஜனாதிபதிக்கு மட்டுமல்ல, ரணிலுக்கும் அரசியல் எதிர்காலத்தை மோசமாகப் பாதிக்கும் விடயமாகிவிடும்.

எனவே, தேசிய அரசு அமைக்கும் யோசனையை இரு தரப்பும் அக்கறையுடன் பரிசீலிக்கவும்கூடும்.

சுதந்திரமடைந்த காலம்முதல் இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த பிரதான இரு கட்சியினரும், தம்மை ஒதுக்கிவிட்டு மூன்றாவது புதிய சக்தியொன்று ஆதிக்கவலுவுடன் ஆட்சிக் கதிரையில் அமர்வதை எக்காரணம் கொண்டும் விரும்பமாட்டார்கள் தான்.


அந்த அடிப்படையில் தேசிய அரசு குறித்து இரு தரப்பும் ஆலோசனை செய்யக்கூடும்.

எது எப்படியானாலும் அமையப்போகும் புதிய நிறைவேற்று அதிகார ஆட்சி சிங்களத் தேசியவாதிகளுக்குரியதாகவே இருக்கும் என்பதே உண்மையாகும்.

அது தமிழ்த்தேசியத்தை ஒருபோதும் முழுமையாக அங்கீகரிக்கப்போவது கிடையாது. சமாதானத்தைப் பற்றிப் பேசினாலும்கூட... ஆட்சி அதிகார கதிரையில் அமரப்போகும் எந்த தலைவரும் சிங்கள தேசியம் குறித்து மட்டுமே பேசப்போகும் ஒருவராக மட்டுமே இருப்பார் என்பதை தமிழ்மக்கள் நன்கு அறிந்தேயுள்ளனர்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி'யார் பார்வையில்...**

# கொலை, கொள்ளைகளைத் தடுக்க முடியாதவர்கள் வீண்பழி சுமத்துவதா?

வீதியில் ஒருவர் சென்று கொண்டிருந்தார். அவரிடமிருந்த பணப்பையை திருடன் ஒருவன் பறித்துக் கொண்டு ஓடினான். பையைப் பறிகொடுத்தவர் 'திருடன் திருடன்' என்று சத்தமிட்டபடி துரத்தினார். வீதியில் வந்தவர்களும் நின்றவர்களும் 'திருடன் திருடன் பிடி பிடி' என்று துரத்தினார்கள். கூட்டம் அதிகரித்துவிட்டது. எல்லோரும் திருடன் திருடன் என்று கத்திக்கொண்டு துரத்தினார்கள். பையைப் பறித்துக்கொண்டு ஓடிய திருடனும் கூட்டத்துடன் சேர்ந்து கும்பலோடு கும்பலாக திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடினானாம். இப்படித்தான் இப்பொழுது நடைபெறும் கொலைகளிலும் கொள்ளைகளிலும் 'புலி புலி' என்று ஓலமிட்டுக் கொலை செய்பவர்கள் பலரும் புலிகள்மீது பழியைச் சுமத்திவிட்டுத் தாங்கள் நல்லவர்கள்போல நடந்துகொள்ளப் பார்க்கிறார்கள் என்று என்முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம் சொன்னார்.

எதை வைத்து இப்படிச் சொல்லுகிறீர்? என்று கேட்டேன்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தங்கள் அரசியல் பணிகளைச் செய்வதற்குப் பாதுகாப்பில்லை என்று தெரிவித்து அங்கு அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை தமது நிர்வாகப் பகுதிக்குத் திருப்பி அழைத்துக் கொண்டார்கள். இதன்பின்னர்தான் இந்தப் பகுதிகளில் கொலைகள், கொள்ளைகள் அதிகரித்திருக்கின்றன. ஏன் கொலை செய்யப்படுகிறார்கள், எதற்காகக் கொலை செய்யப்படுகிறார்கள் என்று எவருக்கும் தெரியாது.

ஆனால், அரசாங்க ஊடகங்களும் கொழும்பிலிருந்து வெளியாகும் ஊடகங்களும் இந்தக் கொலைகள் எல்லாமே விடுதலைப் புலிகள் செய்ததாகவே செய்திகளை வெளியிடுகின்றன. சில அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் இந்தக் கொலைகளுக்கான பழியை புலிகள் மீதே சுமத்துகின்றன என்று பரமசிவம் சொன்னார்.

சில தினங்களுக்கு முன் கிழக்கு மாகாணத்தின் கல்முனையில் தேங்காய் வியாபாரியொருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். உடனடியாகவே முஸ்லிம் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் புலிகள் மீது பழி சுமத்தி அறிக்கை விடுத்தார். இதைத் தொடர்ந்து இன்னொரு முஸ்லிம் அரசியல் பிரமுகரும் அறிக்கை விடுத்தார். தொடர்ந்து மறைந்த தலைவர் அஷ்ரப் தொடங்கிய முன்னணியைச் சேர்ந்தவரும் அறிக்கை விடுத்தார். இந்தக் கொலையை ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதற்கும் ஒரு முஸ்லிம் பிரதி அமைச்சர் அறிக்கை விடுத்தார்.

கல்முனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், கல்முனைச் சம்பவம் தொடர்பாக அரசு உடன் நடவடிக்கை எடுத்து, இதன் பின்னணியில் இருந்து செயற்படுபவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து தண்டிக்க வேண்டுமென்றும், இல்லையேல் விளைவுகள் பாதகமாக இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் மீசாலையில் ஆசிரமம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்திய இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு, நையப்புடைக்கப்பட்டு வீதியிலிருந்து மீட்கப்பட்ட சம்பவத்தையும் ஒரு அரசியல் கட்சியின் ஒலிபரப்புச் சேவை நிகழ்ச்சியில் புலிகளுடன் முடிச்சுப் போட்டுப் பிரசாரம் செய்தது.

இந்தத் துறவியிடம் பெருந்தொகைப் பணத்தை புலிகள் கேட்டதாகவும், கொடுக்க மறுத் ததால் இவர் தாக்கப்பட்டதாகவும் அந்த ஒலிபரப்பு நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது என்றேன்.


போயும் போயும் துறவியிடம் பல லட்சம் ரூபாய்களைக் கேட்கும் நிலையில் புலிகள் இருக்கிறார்களே என்று கூட இந்த ஒலிபரப்புச் சேவையை நடத்துபவர்கள் சிந்திக்கவில்லை. இது மட்டுமல்ல இந்தத் துறவி ஆசிரமம் வைத்திருந்த மீசாலைப்பகுதி மக்கள்கூட துறவிக்கு அனுதாபம் தெரிவிக்கவில்லை. கொக்குவிலில் மலையாள மாந்திரிகர் ஊர் மக்களிடமிருந்து பின் கதவால் தப்பிச் சென்ற சம்பவத்தை புலிகளுடன் முடிச்சுப் போடவில்லையோ தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் அரசியல் பணியாளர்கள் தமது நிர்வாகப் பகுதிக்கு திருப்பியழைக்கப்பட்ட பின்னர்தான் படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்திருக்கின்றன. விடுதலைப் புலிகள் தமது அரசியல் பணிகளைச் செய்வதற்காக அரசியற் பணியாளர்களை இந்தப் பகுதிகளுக்கு மீண்டும் விரைவாக அனுப்பும்படி பொதுமக்களே இப்பொழுது கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

சில வருடங்களுக்கு முன் தென்னிலங்கையில் அமைதியும் ஒழுங்கும் சீர்குலைந்து கொள்ளைகளும், கொலைகளும் அதிகரித்திருந்தபோது, ஒரு சில சிங்கள அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளிடம் நாட்டின் நிர்வாகத்தை சில வருடங்களுக்காவது ஒப்படைத்துப் பார்க்கலாம் என்று யோசனை தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து புலிகளுக்கு விரோதமாகவே எழுதும் ஆங்கிலத் தினசரியில் நாட்டின் நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் சில காலத்துக்கு ஒப்படைக்கவேண்டுமென்றும் பிரபாகரனிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டுமென்றும் வாசகர் சிலர் எழுதிய கடிதங்கள் வெளிவந்திருந்தன என்று நினைவுபடுத்தினேன்.

இப்பொழுது கொழும்பிலும் வடக்கு-கிழக்கிலும் நடக்கும் கொலைகளுக்கு புலிகள் மீதே அரசும், அமைச்சர்கள் சிலரும், படைத்தரப்பினரும் பழியைச் சுமத்துகிறார்கள். கொலைகளைத் தடுப்பதற்கு அரசினாலும், அரசின் காவல்துறை, புலனாய்வுத்துறையினாலும் பாதுகாப்புப் படையினராலும் முடியவில்லை. கொள்ளைகளையும் தடுக்கமுடியவில்லை. நடந்து முடிந்த கொலைகளையும், கொள்ளைகளையும் யார் செய்தார்கள் என்றுகூடக் கண்டுபிடிக்கும் திறமையும் தகுதியும் இவைகளுக்கு இல்லை. இதனால், எந்தக் கொலை நடந்தாலும் புலிகள் மீது பழியைப்போட்டுத் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். கொலை, கொள்ளைகளைத் தடுக்கமுடியாத அரசும், படைகளும் பொறுப்பிலிருந்து என்ன பயன்? தமிழர் தாயகத்திலிருந்து காவல்துறையும் பாதுகாப்புப் படைகளும் வெளியேறினால், இங்கு கொலைகளும் கொள்ளைகளும் தாமாகவே நின்றுவிடும். இங்கு கொலைகள், கொள்ளைகள் நடைபெறாமலிருக்கவேண்டுமானால், அரச பாதுகாப்புப் படைகளும் காவல்துறையும் உடனடியாக வெளியேறுவதே ஒரேவழி என்று சொல்லியபடி பரமசிவம் நகர்ந்தார்.

அரசியல் கட்டுரை...









# முரண்பாடுகளின் உடன்பாடுகளும்... உடன்பாடுகளில் முரண்பாடுகளும்...

நாட்டில் சமாதானத்தைக் கட்டி யெழுப்பி, தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து வைப்பேன் என்று 'சமாதான தேவதை' வேஷமிட்டு, வசனம் பேசி, ஆட்சிக்கு வந்த சந்திரிகா - 12 வருடங்களுக்குமேலாக ஆட்சி பீடத்திலிருந்து பொய், புரட்டுகள் பேசித் தமிழருக்குத் தாராளமாக அநியாயங்களைச் செய்துவிட்டு, இப்போது நாட்டில் சமாதானத்தைக் காணாதவராகவும், தனது கட்சிக்குள் சமாதானத்தைக் காணாதவராகவும், தனது மனதிலே சமாதானத்தைக் காணாதவராகவும் அந்தப் பீடத்திலிருந்து இறங்கிப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டருக்கிறார்.

## கோஷங்கள் மாறுகின்றன...! வேஷங்கள் கலைகின்றன...!!

அவர் சும்மா போக ஆயத்தமாக இல்லை. பொய் பேசுவதில் நோபெல் பரிசு பெறத்தக்கவர் என்று தெற்குப்பத் திரிகைகள் சில சூட்டிய 'புகழாரத்தோடு'தான் அவர் போகப் போகிறார்.

இதுவரை காலமும் சந்திரிகாவின் கட்சியில் அவருக்கு விசுவாசமாக ஒதுங்கி, பதுங்கி, மரியாதை கொடுத்துவந்த மஹிந்த ராஜபக்ஷ, இன்று அவர் வகித்த அதிகார பதவியில் தான் அமர வேண்டும் என்ற கரைகடந்த ஆசையோடு அவரை ஒரு தூசாகவும் மதிக்காமல், அவரது எதிரியாகிவிட்ட ஜே.வி.பியோடும், முரண்பாடுள்ள ஹெல உறுமயவோடும் தன் போக்கிலே ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

இந்த நிலையில் ஆட்சியில் உள்ளோரின் அரண்மனைப் பணியாளர்களாகவும், துணைப் படையினராகவும் ஏவல் புரிவதையே இலட்சியமாகவும், தொழிலாகவும் செய் துவந்த சில தமிழ்க்குழுக்கள், இப்போது சந்திரிகாவுக்கு நன்றி மறந்த ஒருவராக மாறியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னால் கை கட்டியும், கை தட்டியும் நிற்கிறார்கள்.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, சமாதானப் பாதையில் தமிழர்களுக்கு தன்மானத்தோடு விடுதலை அதுவே எமது இலட்சியம்' என்பன போன்ற வங்குரோத்து வசனங்களை அதிக செலவுசெய்து எழுதி - இராணுவ முகாம்களுக்குள்ளும், பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் பலமான கம்பங்களில் சிலர் தொங்கவிட்டிருக்கிறார்கள்.

இப்போது அதே இடங்களுக்குப் பக்கத்தில் தேர்தலில் ராஜபக்ஷவுக்கு ஆதரவான பெரிய விளம்பரங்களை தங்கள் கட்சிப் பெயரைப் போட்டு அச்சிட்டு அவர்கள் ஒட்டி வருகிறார்கள்.

அந்த விளம்பரத்தில் மஹிந்த ராஜ பக்ஷவைச் சுற்றி புறாக்கள் பறப்பது போன்ற படங்கள் - சமாதானப் புறாவாம்! மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களின் துயர் தீர்க்க எல்லாவற்றையும் தாராளமாக அள்ளிக் கொடுக்கப் போகிறாராம் என்பதுபோன்ற புரட்டு வெற்று வசனங்கள்...

ராஜபக்ஷவுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்துகொண்ட கட்சிகள், தமிழ் மக்களின் வேதனைமேல் வேதனைகளுக்கு எவ்வாறெல்லாம் ஆவேசத்துடன் வித் திட்டு வருகின்றன என்பதைத் தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டிய அவசியமேயில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் அள்ளிக்கொடுத்த நிவாரண உதவிகளை வடக்கு - கிழக்கு மக்களுக்குப் பகிர்ந்தளிக்க இனவாதப் பூச்சுப் பூசி, மனிதாபிமானமற்ற தடை, இடைக்கால நிர்வாகம் இல்லை, தமிழர்களை அடக்கியாண்ட ஒற்றையாட்சி முறையை மீண்டும் கொண்டு வருதல் என்பவற்றுடன் சிறுபான்மை இனங்களை ஒரேயடியாக நசுக்கி, அடிமையாக்குவதற்காக அந்தக் கட்சிகள் முன்வைத்த சமாதான விரோத, அநீதியான நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டே ராஜபக்ஷ அந்தக் கட்சிகளோடு தேர்தல் ஒப்பந்தம் செய்துள்ளார்.

எனவே, இனவாதிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றி, தமிழர்களை எழ விடாது அடிமைகளாக்கிவிடுவதற்கு அவர்களோடு கைகோர்த்து நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு என்ன காரணத்தைச் சொல்லி இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்கும் விளம்பரங்களை இராணுவ, பொலிஸ் பாது காப்புக்குப் பின்னால் ஒட்டி யொட்டிச் சென்று, ஒட்டி வருகின்றனர்களோ?

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று முன்பு நீங்கள் எழுதிய போர்ட் பலகையை இனியாவது கழற்றி வைத்தால் நல்லது. ஏனெனில் அதனைக் கண்டால் ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் ராஜபக்ஷவுக்குகிட்ட உங்களை நெருங்கவிடமாட் டார்கள்!

மறுபக்கம் பார்ப்போம். ராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்துள்ள கட்சிகள் - தமக்கிடையே முரண்பட்ட கொள்கைகளும், பதவி வெறியும் அவற்றுக்காக ஒன்றையொன்று முந்திக்கொண்டு விழுங் கிவிடக்கூடிய ஆவேசமும் கொண்டவை. இப்போது சந்தர்ப்பத்துக்காக, அதுவும் தங்கள் நிலைகளில் முக்கிய இடங்களை வசதியாகப் பிடிப்பதற்கு அவர்கள் அடக்கி வாசிக்கிறார்கள்.

எனினும், தமிர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தேர்தல் கவர்ச்சிக்காக என்றாலும் தமிழ் மக்களின் துயர்மிக்க பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று ஏதாவது நன்மையான வழிகளை, நல்ல மாதிரியாக வேனும் கூறுகிறார்களா? அவ்வளவுதூரம் இனத்துவேஷம் அவர்களிடையே புரையோடிக் கிடக்கிறது!

தமிழர்களை யுத்தம் செய்து அழிக்க வேண்டும் என்ற ஆவேசமே அவர்களது அடிமனதில் உள்ளது. இதுதான் உண்மை!

இந்த மன ஓர்மத்திலேதான் ஹெல உறுமயவின் மஞ்சள் அங்கிகள், மஹிந்த ராஜபக்ஷ தம்முடனான ஒப்பந்ததை பின்பு மீறி தமிழர்களுக்கு ஏதாவது அள்ளிக் கொடுத்துவிடுவாரோ என்ற சந்தேகத்தில் கண்டி தலதா மாளிகையில் புத்தரைச் சாட்சியாகவைத்து, அவரின் முன்னால் மஹிந்த ராஜபக்ஷவைக் கையெழுத்திடச் செய்து, தாங்களும் 'மரபு பேணி' கையெழுத்திட்டுக் கொண்டார்கள்.

எனினும், அந்தச் 'சடங்கின்' பின்னர், ராஜபக்ஷ பத்திரிகையாளர் மத்தியில் அந்த ஒப்பந்தம் தேர்தலுக்கு மாத்திரமே. அதன்படி நான் நடக்கமாட்டேன். தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பேன் என்று தமிழர்களுக்குக் கேட்கும்படி இனிக்கக் கூறியுள்ளார்.

தனது இந்தக் கருத்துக்கு முழு நேர்விரோதமான ஒரு ஒப்பந்தத்தில் புத்தர் பெருமானுக்கு முன்னால் அதை மீறமாட்டேன் என்று சடங்காசாரத்துடன் சத்தியம் செய்து, கையெழுத்து வைத்துவிட்டு, ஒரு நாட்டின் உயர்பதவிக்கு போட்டியிடுபவர் மிகவும் கீழ் மட்டத்தில் இறங்கி, இப்படிப் பொய் கூறினாரே! மஞ்சள் அங்கிகளை மாத்திரமல்ல, இது புத்தபெருமானையே ஏமாற்ற நினைக்கும் எண்ணம் அல்லவா? இப்படியான 'தலைவர்' தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பேன் என்று இனிக்கச் சொல்வதை எவர்தான் நம்புவார்களாம்.

அவருக்காக இப்போது தேர்தல் வாக்குக்கேட்டு, விளம்பரம் ஒட்டுவோர் - அவர் தோல்வியடைந்தால் இன்னொரு 'அரண்மனை'க்குப் போய் ஒண்டிக்கொள் வார்கள்! அகதி வாழ்வையும், அவலங்களையும் நீண்டகாலமாக அனுபவித்து வரும் தமிழ் மக்கள் எங்கே பேவார்கள்?

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் அள்ளிக்கொடுத்த நிவாரண உதவிகளை வடக்கு - கிழக்கு மக்களுக்குப் பகிர்ந்தளிக்க இனவாதப் பூச்சுப் பூசி, மனிதாபிமானமற்ற தடை, இடைக்கால நிர்வாகம் இல்லை, தமிழர்களை அடக்கியாண்ட ஒற்றையாட்சி முறையை மீண்டும் கொண்டு வருதல் என்பவற்றுடன் சிறுபான்மை இனங்களை ஒரேயடியாக நசுக்கி, அடிமையாக்குவதற்காக அந்தக் கட்சிகள் முன்வைத்த சமாதானவிரோத, அநீதியான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டே ராஜபக்ஷ அந்தக் கட்சிகளோடு தேர்தல் ஒப்பந்தம் செய்துள்ளார்.**

செஞ்சேவற் கொடியோன்

---

தமிழீழ பெண்கள் எழுச்சிநாள்...

**தமிழீழ பெண்கள், தமிழ்ப் பெண்கள் சாதிப்பதற்கு இன்னும் நிறையவே இருக்கின்றன. பெண்களின் சாதனைகள்தான் பெண்களை விடுதலையை நோக்கி முன்னகர்த்தும். தமிழ்ப் பெண்களின் விடுதலையானது - தமிழீழ தேசவிடுதலையுடன் பின்னிப் பிணைந்துள்ளது.**

# தமிழீழ பெண்கள் வரலாற்றின் உச்சம் - மாலதி...



இன்று தமிழீழ பெண்கள் எழுச்சிநாள். தனது கால்களிலும், கைகளிலும் பூட்டப்பட்ட விலங்குகள் அனைத்தையும் உடைத்து தமிழீழப் பெண்களிடமும், உலகப் பெண்களிடமும் தலைநிமிர்வை ஏற்படுத்திய இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி என்கின்ற பெண்ணின் நினைவுநாள். இன்றைய நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்பற்று எல்லாப் பிரமைகளையும், எல்லாக் கருத்தியல் வார்தங்களையும் உடைத்தெறிந்த நாள் இன்று.

இன்றைய நாளுக்கும், நினைவுக்குமுரிய பெண்ணான மாலதி வானத்திலிருந்து குதித்தவரல்ல. தமிழீழத்தின் மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி என்ற அழகான விவசாயக் குடும்பத்தில் உதித்தவர். மிகச் சாதாரணமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தவர். உள்ளேயும், புறத்தேயும் பல சவால்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த அவரது வாழ்வின் - உன்னதமான ஒரு கட்டம் தோன்றியது. அதுதான் அவரை தேச விடுதலைப் போராட்டத்தின் பங்காளியாகியது.

மாலதி தேச விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட காலப்பகுதியை உற்றுநோக்கத்தக்கது. பெண் பற்றிய சமூகக் கருத்தியல் அப்போது மிக மோசமாயிருந்தது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. அந்தக் கருத்தியலை உடைக்கத் துணிந்த ஒருசிலரில் மாலதி முதன்மையானவர். "சொல்லுக்கு முன் எப்பொழுதும் செயல் இருக்கவேண்டும்" என்ற ஏமது தேசியத் தலைவரின் கருத்துக்கு அமைவாக மாலதி முதலில் சாதித்துக்காட்டினார்.

கடுமையான பயிற்சிகளைப் பெற்றார். தன்னுடைய மதிநுட்பத்தால் எதிரியைத் திணறடித்தார். ஆக்கிரமிப்பு இராணுவத்துடனான நேரடிச் சமரில் உடலில் விழுப்புண்ணடைந்து - சயனைட் அருந்தி வீரச்சாவை அணைத்துக்கொண்டார். தேச விடுதலைக்காகத் தன் உயிரையே கொடுத்ததன் மூலம், மாலதி தமிழீழப் பெண்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை விதையை ஊன்றினார். அரியாத்தை, குருவிச்சிநாச்சியார் போன்றவர்களுக்குப் பிறகு தமிழ் மக்களின் மனங்களை வெல்பவராக மாலதி என்ற வீரப்பெண் விளங்கினார். இந்த வீரப்பெண்ணின் நினைவுதினத்தைக் கொண்டாடுவதன் மூலமும், வழிபடுவதன் மூலமும் தமிழர்களின் மிகத் தொன்மையான, உன்னதமான, உயர்ந்த பண்பாட்டு நிலையை நாம் மீண்டும் வலுப்படுத்துகின்றோம். சாதாரண பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்பதை மாலதி தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மாலதியின் வழித்தடத்தில் ஆயிரம் ஆயிரம் சுவடுகள் தமிழீழப் பெண்களால் பதிக்கப்பட்டிருக்கின்றன. களமுனையில் பல சாதனைகள் தமிழீழப் பெண்களால் படைக்கப் பட்டிருக்கின்றன. உடல், உள ரீதியாகப் பெண்ணின் பலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. 'பெண்ணால் முடியாது' என்று சமூகம் நிர்ணயித்திருந்தவை - அவை பற்றிய கருத்துநிலைகள் தகர்த் தெறியப்பட்டிருக்கின்றன.

ஆனால் - ஒப்பீட்டு ரீதியில் இந்த மாற்றங்கள் குறைந்த அளவாகவே காணப்படுகின்றன. சனத்தொகையில் பத்துப் பேரில் ஏழு பேர் பெண்களாக இருக்கின்ற நிலையில், பெண்களின் செயல்வடிவ சாதிப்புகள் நிறைய வெளிவரவேண்டும்.

இன்றைக்கும் மனதுக்குள் விம்மி வெடித்துக்கொண்டிருக்கும் பல பெண்கள் இருக்கின்றனர். சிங்கள அரசின் திட்டமிட்ட வலைப்பின்னல்கள் பெண்களைத் துன்புறுத்துகின்றன, வதைக்கின்றன, சீரழிக்கின்றன. பெண் என்பதற்காகவே அரச பயங்கரவாதிகளால் புதைகுழிக்குள் புதைக்கப்பட்ட பெண்கள் பலர். மனச் சிறைகளிலிருந்து விடுபடமுடியாமல் தவிக்கும் பெண்களும் உளர்.

எமது தேசியத் தலைவர் குறிப்பிட்டிருப்பது போல - 'பெண் விடுதலை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை' இந்தச் சிக்கல்களிலிருந்து விடுபடப் பெண்கள் தாமாகவே துணிய வேண்டும். துணிந்தவர்களே வெல்கிறார்கள். மாலதியை யாரும் தள்ளி உந்திவிடவில்லை. பிரச்சினைகளை எதிர்கொள்ளத் துடித்தார். அதனால் வரலாற்றிலும் நிலையானார். காயப்பட்டுப்போன கணத்தில் - முடிவெடுத்து - 'என்ர ஆயுதத்தைப் பிடியுங்கோ, என்ர ஆயுதத்தைக் காப்பாற்றுங்கோ' என்று கூறிவிட்டு, தன்னை அர்ப்பணித்துக்கொண்ட துணிச்சல் மாலதியை இந்தத் தேசத்தில் அடையாளப்படுத்தியது.

தமிழீழப் பெண்கள், தமிழ்ப் பெண்கள் சாதிப்பதற்கு இன்னும் நிறையவே இருக்கின்றன. பெண்களின் சாதனைகள்தான் பெண்களை விடுதலையை நோக்கி முன்னகர்த்தும். தமிழ்ப் பெண்களின் விடுதலையானது - தமிழீழ தேசவிடுதலையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று உன்னதமான, உச்சமான நிலையில் இருக்கிறது. தமிழீழப் பெண்கள் இந்த உச்சமான, உன்னதமான சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடுவது சரியானதாக இருக்காது. அர்ப்பணிப்புகள், தியாகங்களூடாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டப் பங்களிப்பில், ஏதோவொரு வகையில் பெண் உந்துசக்தியாகவேண்டும். ஏனெனில் பெண் விடுதலைதான் மண் விடுதலையின் சமாந்தரமாக இருக்கிறது.

இதற்காகப் பெண்களிடம் விழிப்புணர்வு அவசியமாகிறது. இந்த விழிப்பின்மூலம் சர்வ உலகுக்கும் இன்றைய நாளில் தமிழீழப் பெண்களின் எழுச்சி நன்கு புலப்படவேண்டும். மாலதி தமிழீழப் பெண்களின் வரலாற்றில் உச்சமாய் உயர்ந்துள்ளார். மாலதியின் மன உறுதியையும், நம்பிக்கையையும் உள்வாங்கி, தலை நிமிர்வதே இன்றைய நாளின் சிறப்பாகும்.

ஆதிலட்சுமி சிவகுமார்

## நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தால்

# பாகிஸ்தானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இருபதாயிரத்தைத் தாண்டியதாக அறிவிப்பு

உலக நோக்கு



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானின் முசாபராபாத்தை மையமாகக் கொண்டு நேற்றுமுன்தினம் காலை 7.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தால் பாகிஸ்தானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபதாயிரத்தைத் தாண்டிவிட்டதாகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்திற்கும் அதிகமெனவும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டுமென பாகிஸ்தான் தனியார் தொலைக்காட்சியொன்று தெரிவித்தது.

இந்த நில நடுக்கத்தால் பாகிஸ்தானிலுள்ள பல கிராமங்கள் முற்றாக அழிந்துவிட்டன. வீடுகள், கட்டடங்கள் முற்றாக இடிந்து தரைமட்டமாகியுள்ளன. மின்சாரம், தொலைத்தொடர்பு என்பவற்றுடன் போக்குவரத்துக்களும் துண்டிக்



கப்பட்டுள்ளன. இதனால் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் பணி ஹெலிகொப்ரர்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாங்கள் தோண்டுகின்ற ஒவ்வொரு இடிபாடுகளுக்குள்ளும் சடலங்களே குவியல் குவியல்களாகக் கிடந்ததாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ வசதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களில் சிகிச்சை நிலையங்களை அமைப்பது, மக்கள் தங்குவதற்கான தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பது போன்றவற்றுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருவதாக மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

அத்துடன், நிலச்சரிவுகளால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, அவற்றை அகற்றி போக்குவரத்தை மேற்கொள்வதற்கான



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்கு மழை தடையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நில நடுக்கம் ஏற்பட்டவேளை இரண்டு பாடசாலைகள் இடிந்து வீழ்ந்ததில் 600 மாணவர்கள் உயிரிழந்ததாகவும், அந்த மாணவர்களின் சடலங்களை மீட்கும் முயற்சியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை, பாகிஸ்தானின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் எல்லைப் பகுதியில் கடமையிலிருந்த 200 பாகிஸ்தான் படையினரும் நில நடுக்கத்தால் உயிரிழந்தனர்.

இஸ்லாமாபாத்திலுள்ள மார்கலா கோபுரம்



என்ற 19 மாடிகளைக் கொண்ட குடியிருப்பு முற்றாக இடிந்து தரைமட்டமானது. இந்தக் குடியிருப்பில் இருந்தவர்களில் பெருமளவானோர் உயிரிழந்தும், காயமடைந்துமுள்ளனர். நேற்றுக்காலைவரை இந்தப் பகுதியிலிருந்து 20 சடலங்கள் மீட்கப்பட்டதுடன் 90 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு பலரது அழுகைக் குரல்கள் கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து கேட்டதாகவும், ஆனால் நேற்றுக்காலை எவ்வித சத்தமும் கேட்கவில்லையெனவும் மீட்புக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நில அதிர்விலிருந்து மக்கள் மீளாத நிலையில் நேற்று அதிகாலை மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் ஆறாக பதிவாகியிருந்தது. ஏற்கனவே நேற்றுமுன்தினம் பூகம்பம் தாக்கியதும், அடுத்தடுத்து சிறிய அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டன. மிகப் பாரிய பூகம்பம் தாக்கியதும் தொடர்ச்ச்சியாக இலேசான நில அதிர்வுகள் ஏற்படுவதுண்டு. அதன்படி நேற்றுமுன்தினம் காலை பாரிய பூமி அதிர்வுக்குப் பின்னர் அடுத்தடுத்து 40 முறை இலேசான பூமி அதிர்வு ஏற்பட்டது. அத்துடன் நேற்றுமுன்தினம் மாலை 4.40 மணியளவில் பலமான பூகம்பம் தாக்கியது. இது 6.5 ரிக்டராகப் பதிவானது.



நேற்றுக் காலை பாகிஸ்தானில் ஏற்பட்ட பூமி அதிர்வு இந்தியாவின் குஜராத் மாநிலத்திலும் உணரப்பட்டது. இங்கு ரிக்டர் அளவில் 4.1 ஆகப் பதிவாகியிருந்தது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஹெலியில் சென்று பார்வையிட்டார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் -

நடந்து முடிந்த அனைத்தும் எமக்கு ஏற்பட்ட சோதனை. எனவே, இந்தச் சோதனையை ஒட்டு மொத்த தேசமும் ஒன்றுபட்டு எதிர்கொள்ள வேண்டுமெனவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இராணுவத்தினருடன் அனைவரும் இணைந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

முசாபராபாத்திலுள்ள 50 வீதமான வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் தெரிவித்தார்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தொலைபேசி மூலமாக, பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைத் தொடர்புகொண்டு தெரிவித்தார்.

அத்துடன் பல நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவ முன்வந்துள்ளன. குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஐ.நா. செயலர் கொபி அனான் ஆகியோர் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். பூகம்பத்தால் உயிரிழந்த மற்றும் காயமடைந்த மக்களுக்கு அமெரிக்க மக்கள் சார்பாக தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை வழங்கவும் அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

உயிரிழந்தவர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாக ஐ.நா. செயலர் கொபி அனான் குறிப்பிட்டார். அத்துடன் மீட்பு



நடவடிக்கைகளுக்காக ஐ.நாவின் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது நாடு ஒரு லட்சத்து 77 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அனுப்பியுள்ளதுடன், 60 மருத்துவ ஊழியர்கள், அவசரகாலப் பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு அலுவலக ஊழியர்களையும் அனுப்பியுள்ளதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜக் சிரோ தெரிவித்துள்ளார்.

### 40 நைதரசன் குண்டுக்குச் சமனானது!

பாகிஸ்தானை மையமாக வைத்து நேற்றுமுன்தினம் தாக்கிய பூமி அதிர்ச்சியின் சக்தி, 40 நைதரசன் குண்டுகள் வெடித்ததற்கான சக்தி கொண்டது என்று பூகம்ப ஆராய்ச்சி நிபுணர் ஜனார்த்தன நெகி தெரிவித்தார்.

இந்தப் பூகம்பம் மிகவும் கடுமையானது என்பதால் இதன் பின்விளைவு இத்துடன் நின்று விடாது. தொடர்ந்து சிறிது காலம் லேசான தொடர் அதிர்வுகள் அடிக்கடி ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

### இந்தியா :

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 325 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் 400 இற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகின. குறிப்பாக யூரி பகுதியிலேயே பாரியளவில் அழிவு ஏற்பட்டுள்ளது. அங்கு மட்டும் 200 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. பாரமுல்லா



மாவட்டத்தில் பல வீடுகள் இடிந்து வீழ்ந்ததும் தீப்பிடித்துக் கொண்டன. இதனால் சில இடங்களில் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டன.


காஷ்மீரில் நிலச்சரிவு ஏற்பட்டதால் ஜம்மு - காஷ்மீருக்கான பிரதான வீதியூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. செல்போன் இணைப்புகள் மட்டுமே இயங்குவதால் அதன் உதவியுடனேயே மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஜம்மு உட்பட பல நகரங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் 27 அரச அலுவலகங்களில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. காஷ்மீரில் இடம்பெற்ற சேத விபரங்களை காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உட்பட்ட குழுவினர் நேற்று விமானம் மூலம் பார்வையிட்டனர்.




இதேவேளை,நேற்று இரவு பூம்புகாரில் திடீரென வீட்டுச் சுவர்கள், நிலங்கள் என்பன வெடித்ததனால் நித்திரையிலிருந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடிச் சென்று வீதிகளில் தங்கியிருந்தனர்.

இதனிடையே மீண்டும் பூகம்பம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக பாகிஸ்தான் விஞ்ஞானிகள் நேற்றுத் தெரிவித்ததையடுத்து அங்கு ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர்.



### வடக்கிலிருந்து தெற்குத் திசை நோக்கி இமயமலையை நகர்த்தியது பூகம்பம்!



பாகிஸ்தானை மையமாகக் கொண்டு ஏற்பட்ட பூகம்பத்தால் இமயமலையின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. காஷ்மீர் மாநிலத்தில் பெரும் பகுதி இமயமலையில்தான் உள்ளது. அங்கு ஏராளமான மலைச் சிகரங்கள் உள்ளன. இவற்றில் பல கிராமங்களில் சாலைவசதி, தகவல் தொடர்பு கிடையாது.

பூகம்பத்தால் மலையில் பல இடங்களில் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் இருந்த கிராமங்கள் அடியோடு நாசமாகியுள்ளன. இதனால் கிராமமக்கள் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். ஆனால் சாலை வசதி, தகவல் தொடர்பு சரியாக இல்லாததால் அங்கு பாதிக்கப்பட்ட மக்களின் விபரம் எதுவும் சரியாக தெரியவரவில்லை.

இந்தப் பகுதிகளில் ராணுவ முகாம்கள் உண்டு. நிலச்சரிவில் ராணுவ முகாம்களும் அடியோடு நாசமாகி இருக்கின்றன. பதுங்குகுழிகளிலிருந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுவந்த பல ராணுவ வீரர்கள் உயிரோடு சமாதியாகிவிட்டனர்.

மலைக் கிராமங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இன்னும் மீட்புக் குழுவினர் செல்லவில்லை. அதேநேரத்தில் அங்கு காயமடைந்தவர்களை கிராம மக்களே வைத்தியசாலைக்கு தூக்கி வந்த வண்ணம் உள்ளனர். இமயமலையில் உள்ள பல சிகரங்கள் அப்படியே பெயர்ந்து விழுந்துள்ளன. எங்கு பார்த்தாலும் பாறைகளின் சிதறல்களாகவே காட்சி அளிக்கிறது.

பூகம்பத்தால் இமயமலையில் மிகப்பெரிய பிளவு ஏற்பட்டிருக்கிறது என்று உத்ராஞ்சல் மாநில புவியியல் ஆய்வு மைய இயக்குனர் பி.சி.நவானி கூறியுள்ளார். இதனால் இமயமலை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இமயமலையில் இந்திய நிலப்பரப்பும், திபெத் நிலப்பரப்பும் சந்திக்கும் இடத்தில் நில மோதல்கள் ஏற்பட்டு ஏற்கனவே விரிசல்கள் இருந்தன. அதில் ஏற்பட்ட மாற்றங்களால்தான் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய பூகம்பத்தால் வடமேற்கில் இருந்து தென்மேற்கு நோக்கி விரிசல் ஏற்பட்டுள்ளதெனவும் நவானி கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொலிஸாரால் தேடப்பட்டவர் காயங்களுடன் கண்டுபிடிப்பு!

பருத்தித்துறை ——

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் பல வழக்குகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் பற்றை ஒன்றிலிருந்து மீட்கப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் பருத்தித்துறை மாயக்கை விறுமன் கோயிலுக்கு முன்பாக நடைபெற்றது. முத்துலிங்கம் சந்திரகுமார் (வயது 33) என்ற நபரே கடுமையாக தாக்கப்பட்டு வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி நபரை இனந்தெரியாதவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கடத்திச்சென்றதாகவும் பின்னர் தம்பசிட்டி மாயக்கை பகுதியில் உள்ள விறுமன் கோவிலின் முன்பாகவுள்ள பற்றைப் பகுதியில் அடிகாயங்கள் மற்றும் வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் அவர் வீசப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

பின்னர் அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள் மேற்படி நபரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இதேவேளை, இந்த நபர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டதால் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்காக அழைக்கப்பட்டபோதும் இவர் அங்கு சமுகம் கொடுக்காமையால் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு நோயாளர் விடுதியில் பலத்த பொலிஸ் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (14)

# இயன் மாட்டின் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு ——

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசகர் இயன் மாட்டின் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

அவருடன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி மொன்கோனும் அங்கு சென்றிருந்தார்.

நேற்றுக்காலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளையும், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியப் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

அத்தோடு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசசார்பற்ற பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன்பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பில் உள்ள நாவலடி, கல்லடி, டச்பன் பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு நேற்று பிற்பகல் காத்தான்குடி முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்.

## பிரதமர்...

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கண்ணாடி கூண்டிற்குள் நின்றே உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியங்களை...

வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட கவலையடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதன்காரணமாக அவர் அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை கடற்படை அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன

கடற்படையின் ஆவணங்கள் அனுமதியின்றி தனிப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படுவது சட்டத்துக்கு முரணானதாகும். கடற்படையின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக கடற்படை அதிகாரிகள், கட்டளை அதிகாரிகள், பொறுப்பதிகாரிகள் மற்றும் அதிகாரிகளுக்கு தலைமை அதிகாரிகள் அறிவிக்குமாறும் கடற்படைத் தளபதி கேட்டுள்ளார்.

அனைத்துக் கடற்படையினருக்கும் பொது அறிவித்தலாக இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# 'தினமின' பிரதம ஆசிரியர் சந்திரிகாவால் பதவி நீக்கம்!

கொழும்பு——

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரில் அரச சார்பு சிங்கள நாளிதழான தினமின வின் பிரதம ஆசிரியர் மகிந்த அபேசுந்தர பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான போக்கில் இந்தப் பத்திரிகை சென்றுகொண்டிருந்ததாலும், பாரபட்சமற்ற வகையில் பிரதான கட்சிகள் இரண்டின் ஜனாதிபதி வேட்பாளர்களது செயற்பாடுகளையும் பிரசுரிக்கவேண்டுமென்ற ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவை மீறி, ஜே.வி.பிக்கு சார்பான கட்டுரை ஒன்றை அபேசுந்தர பிரசுரித்தமைக்காகவுமே இவர் பிரதம ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக லேக் ஹவுஸ் முகாமைத்துவத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா பாரிஸில் இருந்தவேளை, இவரை பதவி விலக்குவதற்கான உத்தரவை லேக் ஹவுஸ் தலைவர் ஜனதாஸ பீரிஸுக்கு பிறப்பித்தார். ஜனாதிபதி உத்தரவிட்ட ஒரு மணி நேரத்தில் அபேசுந்தரவை பதவி விலக்குவதற்கான கடிதம் வழங்கப்பட்டது. அத்துடன், இவரது இடத்துக்கு சிங்கள வார இதழான சிலுமினவின் ஆசிரியர் கருணாரட்ண அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கருணாரட்ண அமரதுங்க புதிதாக பிரதம ஆசிரியராக நிய மிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால், தான் தொடர்ந்தும் ஆசிரியர் பதவியிலேயே இருப்பதாகவும் தன்னை பதவி நீக்கியதாக வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் தெரிவித்த மகிந்த அபேசுந்தர - பத்திரிகையின் தரத்தை மேம்படுத்துவதற்காகவே கருணாரட்ண அமரதுங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விற்கு சார்பான தகவல்கள் வெளிவருவதைத் தடுக்கவே கருணாரட்ண நியமிக்கப்பட்டுள்ளதாக தின்மின தகவல்கள் தெரிவித்தன.

லேக் ஹவுஸ் பத்திரிகைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதையே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுவதாக தகவல்கள் தெரிவித்தன.

# தமிழ் - முஸ்லிம் மக்கள் உறவை சீர் குலைக்க தீய சக்திகள் முயற்சி!

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு ——

கல்முனையில் முஸ்லிம் வர்த்தகர் சுடப்பட்ட சம்பவம் தமிழ் - முஸ்லிம் உறவை மீண்டும் சீர்குலைப்பதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்முனையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைப்பதற்கு சில தீயசக்திகள் மேற்கொண்டுவரும் சதியில் இதுவும் ஒன்று. மீண்டும் தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையேயான உறவை சீர்குலைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையே இந்தச் சம்பவம் காட்டுகின்றது.

தீய எண்ணம் கொண்ட அரசியல் சக்திகளே இதுபோன்ற கீழ்த்தரமான நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இது திட்டமிட்டு செயல்படும் ஒன்றாகவே நாம் காண்கின்றோம். கல்முனைச் சம்பவம் தொடர்பாக அரசுடன் நடவடிக்கை எடுத்து இதன் பின்னணியில் இருந்து செயற்படுபவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைத்துத் தண்டிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் அரசு உதாசீனப் போக்கை கடைப்பிடித்தால் அதன் பின்விளைவுகள், பாதகமானவையாகவே அமையலாம். நெருக்கடியான காலகட்டத்தில் இன நல்லுறவைச் சீர்குலைப்பதற்கு இலக்கு வைத்துச் செயற்படும் சதிகாரர்களை உடன் இனம்கண்டு மேற்படி முயற்சிகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன முறுகல் மூலம் கலவரத்தைத் தூண்டி அதில் சுயலாபமீட்ட பிற்போக்கு அரசியல் சக்திகள் இதில் ஈடுபட்டிருப்பதை நாம் தேர்தல் கண்காணிப்புக் குழவிடம் எடுத்துரைத்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## பிரதமர் பதவிக்கான...

பின்னர் உறுதி மொழிப்பத்திரம் எதற்கு என்று கேள்வி எழுப்பியுள்ளதாகவும், தெரியவருகிறது.

மகிந்த ராஜபக்ஷ, இது தொடர்பாக அநுரா பண்டாரநாயக்கவுக்கு பதிலளிக்க விரும்பவில்லையென்றும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வேட்புமனுத் தாக்கலின்போது சுதந்திரக்கட்சித் தலைவர் சந்திரிகா குமாரதுங்க மற்றும் அவரது சகோதரரும் வெளிவிவகார அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க உள்ளிட்டோர் நாட்டில் இல்லை என்பதால் சந்திரிகாவின் சகோதரி சுனித்திராவுக்கு மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் அரசியல் நிகழ்வுகளில் தான் பங்கேற்பதில்லையென்று, சந்திரிகாவின் சகோதரி இந்த அழைப்பை நிராகரித்து விட்டார். சந்திரிகா மீதும், அவரது சகோதரர் மீதும் கடும் அதிருப்தியில் உள்ள மகிந்த - அநுராவிற்கு உறுதிமொழிக்கடிதம் தர இயலாது என்று மறைமுகமாகக் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தொடர்ந்து குலுங்குகிறது...

அவசர உதவி கோரி ஊடகவியலாளர்களுடான சந்திப்பை நடத்திய வேளையிலும் நில நடுக்கம் உணரப்பட்டது. இஸ்லாமாபாத், ராவல் பிண்டி உட்பட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் ஆறாகப் பதிவாகியது. இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் அச்சத்துடன் பொழுதை கழித்து வருகின்றனர்.

இதேவேளை, இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600 ஆக உயர்ந்துள்ளதாகவும், இதில் 50 இராணுவத்தினரும் அடங்குவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதனிடையே இமயமலைப் பகுதியில் மீண்டும் கடுமையான பூகம்பம் ஏற்படுமென புவியியல் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். பூமிக்குள் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக இமயமலைப் பகுதியில் பூமிக்குள் அழுத்தங்கள் ஏற்படுவதாகவும் இதனால் கடும் நில அதிர்வுகள் ஏற்படுமெனவும், இது ரிக்டர் அளவில் 8 புள்ளிகளாக இருக்கும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

(மேலதிக விபரங்கள் 11 ஆம் பக்கத்தில்)

## வரலாற்றின் கடமையை...

அடையும் வேகத்தை அனைவருமே விரைவுபடுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் அன்று பெண்கள் தம்மை இணைத்துக் கொண்டபோது, இது பெண் விடுதலைக்குச் சாத்தியமற்ற வழி எனப் பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், இன்று அந்த விமர்சனங்களையெல்லாம் தூக்கியெறிந்து தமிழீழப் பெண்கள் தமது பலத்தில் நிமிர்ந்து நிற்கிறார்கள்.

போராளிப் பெண்கள் துணிவோடும், நம்பிக்கையோடும் சமூகப் பெண்கள் பல துறைகளில் முன்னேறத் தொடங்கிவிட்ட தன்மையை இன்று அவதானிக்க முடிகிறது. பொருளாதார விருத்தியில், அரசியல் எழுச்சியில் தமிழீழப் பெண்கள் வேகமான மாற்றத்தை அடைந்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் வீட்டுக்கு வெளியே போகாமல் குடும்பப் பொறுப்புக்களை மட்டுமே சுமந்த பெண்கள் இன்று அதிகளவில் வெளியிடங்களில் பணிபுரிகின்றனர். அது மட்டுமல்லாமல் இந்த இந்த வேலைகள் தான் பெண்களுக்கு உரித்தானவை என்ற பழைய எண்ணங்களும் மாறிவருகின்றமையை அவதானிக்க முடிகிறது. மிகக் கடுமையான நுட்பமான வேலைகளை எமது சமூகப் பெண்கள் ஆற்றத் தொடங்கி விட்டனர்.

இது எமது தமிழீழ அபிவிருத்திக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைகிறது. இந்த முனைப்பு மென்மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான உழைப்பும், அதன் மூலம் அவர்கள்பெற்றுக் கொள்ளும் நிபுணத்துவ வளர்ச்சியும் அந்தப் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற ஒத்துழைப்புமே இதனைச் சாத்தியமாக்கும்.

இன்றைய சமாதான சூழல் மீதான நம்பிக்கை முற்றிலும் சிதைந்து போயுள்ள நிலையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மூலமும் இராணுவப் பயிற்சி பெறும் மக்கள் படைக்கட்டுமானங்கள் மூலமும் தமது போராட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்த மக்கள் எழுச்சி நிகழ்வுகள் அனைத்திலும் பேரார்வத்துடன் பங்குபற்றி உழைக்கும் பெண்களின் தேசியப்பற்று உன்னதமானது.

மக்களுக்குத் தலைமை தாங்கும் பெண் அரசியல் தலைவிகளாகப் பெண்கள் பரிணாமம் பெறவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் கனவு நனவாகி வருகிறது.

எமது தாயகத்தின் பல பகுதிகள் இன்றும் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு இலக்காகிக் கிடக்கின்றது. அந்த மண்ணை மீட்டெடுக்கவேண்டும். அங்கே சிதைந்துகொண்டிருக்கும் அவர்களின் வாழ்வை, அவர்கள் சுமக்கும் துயரச் சிலுவைகளைத் தூக்கியெறிந்து போராடும் பெண்களாக அவர்கள் மாறவேண்டும்.

போர்க்காலங்களில் களங்களில் நின்று போராடும் பெண்களுக்குத் தோள் கொடுத்து கிராமியப் படையாக, எல்லைப்படையாக, துணைப்படையாக களமுனைக்கு வந்து பலம் சேர்த்த பெண்கள் இனியும் அந்தப் பலத்தை மேம்படுத்தவேண்டும் என்பதுதான் காலத்தின் தேவை.

எமது தமிழீழ தேசம் முழுமையாக விடுதலையடையும் போதுதான் சமூக மாற்றங்களைச் சாத்தியமாக்கும் சூழல் உருவாகும். அதற்காக அனைவரும் இணைந்து போராடி தேசிய விடுதலையை விரைவுபடுத்த வேண்டும்.

வல்லமைமிக்க இளம் பெண்கள் போராட்டத்துக்கு பலம் சேர்க்கத் தயாராகும் போதுதான் எதிரியின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற தென் தமிழீழத்தின் வளம் கொழிக்கும் நிலத்தையும் அந்த நிலத்தின் மீதான எங்களின் வாழ்வையும் மீட்டெடுக்க முடியும்.

இத்தனை காலமும் எமது தமிழீழப் பெண்களின் தீராத துயர் சுமந்த வாழ்வுக்கு முடிவுகட்டுவதில் பெண்ணுரிமை, மனிதநேயம் என்ற மகத்தான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் சர்வதேச சமூகத்துக்கு பங்குண்டு.

எனவே, தமிழ்ப் பெண்களின் தேசிய அரசியல் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு அதற்கு முக்கியத்துவமளித்து தமிழ்த்தேசிய இனத்தின் அங்கமாகிய தமிழ்ப் பெண்களின் விடுதலை நோக்கிய வாழ்விற்கு ஒட்டுமொத்தமான தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைக்குரலை புரிந்துகொள்ள வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இன்று ஒவ்வொரு தமிழீழப் பெண்ணும் ஆழமாக உணர்ந்து முடிவெடுக்கவேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டோம். அன்று எமது விடுதலைக்கு எங்கும் தடைகளேயிருந்தன. இன்று எமது தேசியத் தலைவரின் காலத்தில் எம்மை மேம்படுத்தும் படிக்கற்களே தென்படுகின்றன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று தமிழீழ...

ஊர்தி பாண்ட் வாத்திய இசையுடன் யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தை சென்றடைந்து நினைவு நிகழ்வுகள் நடைபெறுவதுடன் எஸ். பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் உருவான எனக்குள் நிலவு என்னும் நாடகமும், எழுச்சி கானங்களும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சியில் காலை 9 மணிக்கு இரணைமடுச் சந்தியில் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்திலும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இதேவேளை 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் 18 ஆண்டு நினைவு தின நிகழ்வு பெண்கள் மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் மாலை ஐந்து மணிக்கு பளை பொது மைதானத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### கந்தையா முருகன்

(சந்திரன் சிற்றூர்திச் சாரதி)

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முருகன் (சந்திரன் சிற்றூர்திச் சாரதி) 09.10.2005 (நேற்று) காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா, செல்வியின் அன்பு மகனும், நாகம்மாவின் (மணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிர்காமு, பொன்னி ஆகியோரின் மருமகனும், கந்தசாமி, ஆறுமுகம், கணேசன், சின்னப்பிள்ளை, பரமேஸ்வரி, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஐயாத்துரை, சுவாமி சிவா (சுவிஸ்), தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.10.2005 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணிக்கு ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சந்திரவாசா
கைதடி தெற்கு,கைதடி

(இ)

தகவல்
மனைவி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.